# MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES

To Discern the Truth is Wisdom– Half yearly Journal

Vol.1: Issue.1, July 2024




Editor

Dr. R.Manimegalai

# MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES

**To Discern the Truth is Wisdom– Half yearly Journal**



**Editor-in-Chief**

**Dr. R.Manimegalai**
Associate Professor & Head
Department of Tamil
PSGR Krishnammal College for Women
Coimbatore – 641004
Ph: +919894439821, E-Mail : manimekalair@psgrkcw.ac.in

**Associate –Editors**

**Dr. V.Meenakshi**
Assistant Professor
Department of Tamil
Bishop Heber College
Tiruchirappalli – 620017
Ph: +919566434696,
E-Mail : bagavathgeetha@bhc.edu.in

**Dr A.Manonmani Devi**
Assistant Professor
Department of Languages and Communication
Sultan Idris Education University
Tanjong Malim – 39500, Perak, Malaysia
Ph: +60164722944
E-Mail : manonmanidevi@fbk.upsi.edu.my

**Mr. S.Chandrakumar**
Senior Lecturer - Gr I
Department of Fine Arts
Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka
Ph: +9477 666 1495 chandrakumars@esn.ac.lk

**Dr. N. Gayathri**
Associate Professor
Department of Tamil
PSGR Krishnammal College for Women
Coimbatore – 641004
Ph: +919486331167,
E-Mail : ngayathri@psgrkcw.ac.in

**Dr C.Nandhini Devi**
Assistant Professor, Department of English
National College, Tiruchirappalli - 620001
Ph: +919894211698, E-Mail : nandhinidevi@nct.ac.in



**Masivan Pathippagam,**
3/199, A.Gudalur, Ayandur Post, Kandachipuram, Villupuram – 605755
+919486069548, editor@masivan.in



© Copyright to MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES 2024 • All Rights Reserved •

# Index


| S.No | Title & Author | Pages |
|---|---|---|
| 1 | Role of Father in Sangam Poems (Agapadalkal)<br>**Bagavathgeetha. P** | 01 |
| 2 | Life Aspects in Perumbanaartruppadai<br>**Manimegalai. R** | 09 |
| 3 | Gender Discrimination Based on Female Birth - Presenting Vasanthi Novels<br>**Meenakshi. V** | 15 |
| 4 | Unveiling Feminist Narratives in Ruth Prawer Jhabvala's The Householder<br>**Nandhini Devi. C** | 22 |
| 5 | Cultural Geography in Paripaadal :River Vaigai in Perspective<br>**Vasanthi. V** | 30 |

1

# சங்க அகப்பாடல்களில் தந்தை

# Role of Father in Sangam Poems (Agapadalkal)

**பெ.பகவத்கீதா,** இணைப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620022, தமிழ்நாடு

**Bagavathgeetha. P,** Associate Professor PG –Research Department of Tamil Government Arts College, Thiruchirappalli – 620022, Tamilnadu

ORCID: https://orcid.org/0000-0001-8684-7648

DOI: 10.5281/zenodo.12707378

**Abstract**

*Classical literature is the lifeblood of the Tamils. Classical literature consists of eight books in ettuthogai and ten books in pathupattu and including 18 books names of pathinenkilkanakku. And these included Silapathikaram, Manimegalai, Iraiyanar Kalaviyal Urai, Tholkappiyam, Muthollayiram of 5 other books totalling 41 books. In those ettuthogai books Narrinai ,kurunthogai, Iynkurunooru, kalithogai, Agganannurru are aggapaddalkal.*

*In Sangam literature the role of the father was not defined in the form of "coorru murai " especially in Tamil grammar. While the Sangam period and the pre-Sanga period highlighted the matrilineal society, it is possible to understand to some extent the position of the father in Sangam literature when studies have highlighted the reason for the emergence of a father-dominated society at the end of the period .After Researching over the concept, the role of the father and his social statues is defined in this article. In Sangam literature the book "Narrinai" is the mainstream of the article. It would be concluded 'who is father' and 'what is the role of father' in the view of hero in Sangam poems .In the Sangam literature, the word 'father', the word 'entai', the word 'nundai' are the definitions of the number of words and the place and importance of the father. Since the study is based on the Narrinai, the word 'father' appears in 12 hymns in the Narrinai. It is worth knowing the way in which the father's social value is expressed by the SevliThai (The second mother), the tholizh(The Friend), and the Thaliavan (The lover).*

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர்களின் வாழ்வியல் அடையாளமாக செம்மொழி இலக்கியங்கள் உள்ளன. செம்மொழி இலக்கியங்கள் எட்டுத்தொகையில் உள்ள எட்டுநூல்களும் பத்துப்பாட்டில் உள்ள பத்து நூல்களும் பதினெண் மேல் கணக்கு நூல்கள் ஆகும். பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள 18 நூல்களும் சேர்த்து 36 நூல்கள் அடங்கும். இவற்றோடு சிலப்பதிகாரம், மணிமேகலை, இறையனார் களவியலுரை, தொல்காப்பியம், முத்தொள்ளாயிரம் ஆகிய 5 நூல்களும் சேர்த்து 41 நூல்களாகும். இவற்றில் எட்டுத்தொகையில் உள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு. கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்தும் அகப்பாடல்களாகும். இவற்றில் ஒவ்வொரு பாடலிற்கும் இவற்றை தொகுத்தோர் திணை, துறை, கூற்று, பாடியோர், பாடப்பெற்றோர், பாடல் வரிகளின் வரையறை ஆகியவற்றை வரையறை செய்து தொகுத்தும் வகுத்தும் தந்துள்ளனர். இச்சங்க இலக்கியங்களில் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய், கண்டோர், பாங்கன், பரத்தையர் கூற்று என இடம்பெறும் நிலையில் சங்க

இலக்கியங்களில் தந்தை என்னும் குடும்பத்தலைவன் கூற்று முறையில் குறிப்பிடாத நிலையில் தொல்காப்பியமும் இலக்கணப்படுத்தா நிலையில் சங்க காலத்தில் தந்தையின் பங்களிப்பும் எவ்விதமாக இருந்திருக்கும் என்னும் தேடலின் எல்லையே ஆய்வுப்பொருளாயிற்று . சங்க காலமும் சங்க காலத்திற்கு முற்பட்ட காலமும் தாய்வழிச் சமுதாயத்தை முன்னிலைப்படுத்தி இருந்த நிலையில் தந்தையை முதன்மைப்படுத்திய சமுதாயம் அக்காலத்தின் இறுதியில் தோன்றியிருப்பதற்கான காரணத்தை ஆய்வுகள் எடுத்துரைத்து இருக்கின்ற பொழுது, சங்க இலக்கியங்களில் தந்தையின் நிலை என்ன என்பதை ஓரளவு உணர்வதற்கு இயலும். சங்க அகப்பாடல்களில் தலைவன் தலைவியின் தந்தையை எங்ஙனம் மதிப்பிடுகிறான், தந்தையின் உள்ளம் போன்ற கருத்தோட்டங்களை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு பாடல்கள் ஓவியமாக்கியிருக்கும் அழகில் நற்றிணையையே ஆய்வு வரையறையாகக் கொண்டு ஆய்வு செய்வது புதிய கருத்துகள் வெளிக்கொணர வாய்ப்பாக அமையும். சங்க இலக்கியங்களில்‘தந்தை’ என்னும் சொல் ‘எந்தை’ என்னும் சொல் ‘நுந்தை’ என்னும் சொல் ஆகிய சொற்கள் இடம்பெற்றுள்ள எண்ணிக்கையின் வரையறையும் தந்தையின் இடத்தையும் முக்கியத்துவத்தையும் நிர்ணயிப்பதாக உள்ளன . நல்ல திணை என்று பிரிக்கப்பட்டு நல்ல ஒழுக்கங்களை முன்னிறுத்தி வழங்கப் பெறும் நற்றிணையை முதன்மையாகக் கொண்டு இந்த ஆய்வு அமைவதால் நற்றிணையில் 12 பாடல்களில் ‘தந்தை’ என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. தந்தை பெறும் சமூக மதிப்பினை செவிலித்தாய், தோழி, தலைவன் ஆகியோரின் கூற்றின் வழி அறிவதற்கு உரியதாகின்றது.

சங்க அகப்பாடல்கள் தலைவன், தலைவி ஆகியோரை மையமிட்ட களவு, கற்பு வாழ்க்கையை முதன்மையாகக் காட்சிப்படுத்திய நிலையில் அவர்களின் காதல் வாழ்வில் தந்தையின் பங்கோ அல்லது எதிர்ப்போ இருந்திருக்க வாய்ப்பு உண்டெனில் கூற்று தந்தைக்கு எவ்விதமாக அமைந்திருக்கும் என்பதையும் ஆராய்ந்து அறிய இயலும்.

Keywords: தந்தை, சமூக மதிப்பு, நற்றிணை, செல்வநிலை, கூற்று, தலைவன், தலைவி , தோழி, வாழியர், தொழில், மாண்பு

### சங்க அகப்பாடல்களில் தந்தை

தமிழின் சங்க இலக்கியத்தில் ‘தந்தை’ என்னும் கூற்றும் பாத்திரமும் முதன்மைப்படுத்தா நிலையில் ‘தந்தை’ என்னும் சொல் சங்க இலக்கியம் முழுமையும் இடம் பெற்றுள்ள எண்ணிக்கையை ஆராய்ந்ததில் ‘தந்தை’ 52 இடங்களிலும் ‘எந்தை’ என்னும் சொல் 41 இடங்களிலும் ‘நுந்தை’ என்னும் சொல் 24 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன .

### தொல்காப்பியம் சுட்டும் தந்தை

தொல்காப்பியத்தில் சாத்தந்தை, கொற்றந்தை என “இயற்பெயர் முன்னர் தந்தை வரின்” (தொல்காப்பியர்: 1937 ) என முறைப்பெயர் சார்ந்து எழுத்ததிகாரம் புள்ளிமயங்கியல் 5 ஆவது நூற்பா குறிப்பிட்டுள்ளது. பொருளதிகாரம் கற்பியல் பகுதியில் “தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்” என்னும் 6 வது நூற்பாவும் களவியலில் “தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப" என்னும் களவியல் 46 வது நூற்பாவும் “ நோய் மருங்கு அறிநரும் தந்தையும் தன்னையும் “ என நான்கு இடங்களில் அச்சொல் குறிப்பிடப்படுவதிலிருந்து முறைப்பெயர் சார்ந்தே அமைவதை அறியலாம்.

சங்க இலக்கியப் பதிவுகளின் வழி ஆராயும் பொழுது ‘தலைவி’, ‘தலைவன்’, ‘தோழி’ ஆகிய மூவரை மையமிட்ட அகப்பாடல்களின் கட்டமைப்பிலோ, ‘அரசன்’, ‘புலவன்’, ‘கலைஞன்’, ‘போர்’, ‘வீரம்’, ‘அறிவுறுத்தல்’, ‘அறம்’ எனப் புறப்பாடல்களின் கட்டமைப்பிலோ குறிப்பாக

அகப்பாடல்களில் கூற்று நோக்கில் 'செவிலித்தாய்', 'நற்றாய்', 'கண்டோர்', 'பாங்கர்' கூற்றிற்குக் கொடுத்த பங்களிப்பில் தலைவியின் பெற்றெடுத்த தந்தைக்கு சமூக மதிப்பு எவ்வகையாக இருந்திருக்கும். 'கூற்று' என்பது மறுக்கப்பட்டதா? ஒதுக்கப்பட்டதா? அல்லது இலக்கியச் சொற்புனைவில் 'தந்தை' அதிகாரவரம்பிலிருக்கும் பாத்திரம் என்பதால் காதற்புனைவிற்கும் காதலிற்கும் 'எதிரி' என்ற தோற்றச் சித்தரிப்பு காரணமாகின்றதா? சங்க இலக்கியப் பதிவுகளில் 'தந்தை' யார் என்னும் தேடலை நோக்கிய ஆய்வுப்பயணத்தில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் 'நற்றிணை' யை வரையறையாக கொண்டு கட்டமைக்க முயலுகின்றது.

**நற்றிணையில் தந்தை :**

நற்றிணையில் 12 பாடல்களில் 'தந்தை' என்னும் சொல் இடம் பெற்றிருப்பினும் தந்தை எவ்விதமாக சித்தரிக்கப்பட்டிருக்கிறார் என்பதே முதன்மையானது.

1. "யார்மகள் கொல் இவள் தந்தை வாழியர்"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-8)

2. "கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளான்"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-110)

3. பெரும்கண் ஆயம் உவப்ப தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்து"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-140)

4. "பெரும்பெயர் தந்தை நீடுபுகழ் நெடுநகர்"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-162)

5. "திதலை எஃகின் சேந்ன் தந்தை
தேம்கமழ் விரிதாள் இயல்தேர் அழிசி"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-190)

6. "கண்பட நீர் ஆழ்ந்தன்றே தந்தை
தன் ஊர் இடவயின் தொடுவேன் நுண்பல்"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-198)

7. "தந்தை தன் ஊர் இதுவே"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-198)

8. "தந்தை வித்திய மென்தினை பையச்"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-306)

9. "நல்லோர் தந்தை சிறுகுடி பாக்கம்"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-323)

10. "செல்வதந்தை இடன் உடை வரைப்பின்"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-324)

11. "புன்தலை மந்தி தூர்ப்ப தந்தை
மைவருமால் வரை பாடினள் கொழுச்சி"

(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-373)

12. "கடும்சுறா எறிந்த கொடும்தாள் தந்தை
புள் இமிழ் பெரும்கடல் கொள்ளான் சென்று"

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 : பா.எ-392)**

*நற்றிணையில் 'தந்தை' என்பவர் செல்வவளமை, நற்பெயர், புகழ், கொடை போன்ற பண்பிற்கு அடையாளப்படுத்தும் நிலையில் கோடிட்டுக் காட்டப் பெறும் நிலையினையே மிகுதியான பாடல்கள் சுட்டியுள்ளன.*

**தந்தை என்னும் கருத்துரு :**

*நற்றிணையில் 110வது பாடல் நற்றாய் கூற்று, செவிலித்தாய் கூற்று ஆகிய இரு கூற்றின் அடிப்படையில் முறையே 'மனைமருட்சி', 'மகள்நிலை உரைத்தது' என்னும் துறையில் புகுந்த வீடு சென்ற மகள் பிறந்த வீட்டில் பொற்காலத்தில் சுவையான உணவினை, முத்துகள் பதித்த பொற்சிலம்பு ஒலிக்க துள்ளித் திரிந்து சிறு விளையாட்டியாக விளங்கியவள் தற்பொழுது அறிவும் ஒழுக்கமும் உணர்ந்த நிலையில் தலைவனின் பொருளாதார நிலை தெரிந்து தந்தையின் பெருஞ்செல்வத்தை விரும்பாது ஒரு பொழுது உணவை மறுத்து உண்ணும் பண்பினை எங்ஙனம் பெற்றாள் என்று வியப்பதில், தந்தையின் செல்வ வளமையை*

**"அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றுஎன**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**
**ஒழுகுநீர் நுணக்கு அறல் போல**
**பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையளே"**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 )**

*என்னும் வரிகள் காட்சிப்படுத்தியுள்ளன.*

*செவிலித்தாய் கூற்றில் 'கயமனார்' இயற்றிய நற்றிணை 198வது பாடலும் மகளைத் தேடி சென்ற செவிலித்தாய் தன் எதிரே வந்த கண்டோரைப் பார்த்து கூறியது. அப்பாடலில் தலைவியின் தந்தை ஊரினைக் குறிப்பிடுகின்ற*

**"மைஅணல் எருத்தின் முன்பின் தடகை**
**வல்வில் அம்பின் எய்யா வண்மகிழ்**
**தந்தை தன் ஊர் இதுவே"**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962 )**

*என்னும் பாடலும்*

**"மனை உறைபுறவின் செம்கால் மேடை**
**காமர் துணையொடு சேவல் சேர**
**புலம்பின்று எழுதரு புன்கண் மாலை**
**தனியே இருத்தல் ஆற்றேன் என்றுநின்**
**பனிவார் உண்கண் பைதல் கலுழ**
**நும்மொடு வருவல் என்று எம்மொடு**
**பெரும்பெயர் தந்தை நீடுபுகழ் நெடுநகர்**
**யாயோடு நனிமிக மடவை முனாஅது**
**வேனில் இற்றி தோயா நெடுவீழ்**

**வழிநாள் ஊசலின் கோடை தூக்கு தொறும்**

**துஞ்சுபிடி வருகும் அத்தம்**

**வல்லை ஆகுதல் ஒல்லுமே நினக்கே"**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962)**

*என்றும் 162வது பாடலும்*

**"அந்தோ தானே அளியள் தாயே**

**நொந்து அழி அவலமொடு என் ஆகுவன் கொல்**

**பொன்போல் மேனி தன்மகள் நயந்தோள்**

**கோடுமுற்று யானைகாடு உடன் நிறைதர**

**நெய்பட்டு அன்ன நோன்காழ் எஃகின்**

**செல்வதந்தை இடன் உடை வரைப்பின்**

**ஆடு பந்து உருட்டு நள் போல ஓடி**

**அம்சில் ஓதி இவள் உறும்**

**பஞ்சி மெல் அடி நடைப்பயிற்றும்மே"**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962)**

*என்னும் 324வது பாடலும்*

*தலைவியின் பிறந்த வீட்டுச் சூழலை காட்சிப்படுத்துவதில்*

**'பெரும் பெயர் தந்தை நீடுபுகழ் நெடுநகர்'**

*'செல்வதந்தை இடன் உரை' ஆகிய சொல்லாட்சிகள் தந்தை வீட்டின் செல்வ வளமையைக் குறிப்பதோடு தலைவன் தலைவி மீது கொண்ட ஆழ்ந்த அன்புணர்வையும் தலைவி, தன் தாய்தந்தையைப் பிரிந்து எங்ஙனம் ஆற்றியிருப்பாள், தலைவியின் பெற்றோர் எங்ஙனம் ஆற்றியிருப்பர் என்னும் இரக்க உணர்ச்சியையும் தலைவன் தன் கூற்று வழி பதிவு செய்திருப்பது தலைவனின் பண்புகள் குறித்து மாற்றுத்திறனாய்வு செய்ய வேண்டிய ஆய்வுத் தேவையாகும்.*

## தோழிக் கூற்றில் தந்தையின் ஊர் :

*நற்றிணையில் 323வது பாடலில் தோழி தலைவனுக்கு இரவுக்குறி நேரக் கூறும் கூற்றில் தலைவியின் தந்தையின் அடையாளம் சுட்டப் பெறுகின்றது.*

**"நல்லோள் தந்தை சிறுகுடிபாக்கம்**

**புலி வரிபு எக்கர் புன்னை உதிர்த்த**

**மலிதாது ஊதும் தேனோடு ஒன்றி**

**வண்டுஇமீர் இன்இசை கறங்க திண்தேர்**

**தெரிமணி கேட்டதும் அரிதே**

**வரும் ஆறு ஈது அவண் மறவாதிமே"**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962)**

*என்னும் பாடலில் தலைவி நல்லோன் என்பதோடு தலைவியின் தந்தை சிறுகுடிபாக்கத்தின் தலைவனாக இருப்பதோடு தேரின் மணி ஓசை கேட்பதும் அரிதானது என்னும் குறிப்பில்*

தலைவியின் தந்தை களவினை அறியின் ஏற்படும் பின்விளைவுகளையும் தோழி சொல்லாது சொல்லிச் செல்கின்றாள்.

**தந்தையின் தொழில் :**

நற்றிணையில் இருபாடல்கள் தந்தையின் தொழிலினைச் சுட்டுகின்றன. 306 வது பாடலில் தலைவன் சிறைப்புறமாக இருப்பதை அறிந்த தோழி புனம் கொய்தலிற்கு தலைவியை அனுப்பாது இற்செறிப்பு நிகழ்வதை குறிப்பிடும் நிலையில்

**“தந்தை வித்திய மென்தினை”**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962)**

என்னும் வரி தந்தை விதைத்த தினையானது முளைத்து வருவதைச் காட்சிப்படுத்தும் விதத்தில் தந்தையின் தொழில் உழவு என்பதை அறிய முடிகின்றது.

392 வது பாடலில் செல்வ வளமையின்று கடலில் மீன்பிடிக்க செல்லும் தந்தையும் குடும்பச் சித்தரிப்பும்

**“கடும்சுறா எறிந்த கொடும் தான்தந்தை**
**புள் இமிழ் பெருங்கடல் கொள்ளான் சென்றுஎன**
**மனை அழுது ஒழிந்த புன்தலை சிராஅர்”**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962)**

என்னும் பாடல் வரிகள் காட்சிபடுத்தும் நிலையில் கொடிய சுறாமீனை எறிந்து கொன்ற கடிய முயற்சியைக் கொண்ட தந்தை பறவைகள் ஒலிக்கும் பெரிய கடலுக்குக் கூட்டிச் செல்லாமல் சென்று விட்டார் என்று வீட்டில் அழுது ஓய்ந்த புல்லிய தலையை உடைய சிறுவர்கள் எனப் பொருள் விரிந்த நிலையில் சுறாமீனை கொன்று வரும் தந்தையின் கடின முயற்சியைத் தந்தையின் தொழில்திறத்தை அறிவதோடு நெய்தல் நிலத் தந்தையின் தோற்றமும் முன்னிறுத்தப்படுகின்றது.

**தந்தைவாழியர் :**

நற்றிணையின் 8வது பாடல் இயற்கைப் புணர்ச்சி இறுதியில் தலைவியை அவளுடைய ஆயத்துடன் (குடும்பத்துடன்) பார்க்கும் தலைவன் அவள் தந்தை வாழ்க என்றும் தாய் பொறையனின் தொண்டிப் பட்டினத்துச் சிறப்பெல்லாம் பெறுக என்று வாழ்த்துவதும் தலைவனின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. அப்பாடல்

**“அல்குபடர் உழந்த அரிமதர் மழைகண்**
**பல்பூ பகை தழை நுடங்கு அல்குல்**
**திருமணி புரையும் மேனி மடவோள்**
**யார்மகள் கொல் இவள் தந்தை வாழியர்**
**துயரம் உறீஇயினள் எம்மே அகல்வயல்**
**அரிவளர் அரிந்தும் தருவனர் பெற்றும்**
**தண்சேறு தாஅய மதன்உடை தோன்தாள்**
**கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்**
**திண்தேர் பொறையன் தொண்டி**
**தன்திறம் பெறுக இவள் ஈன்றதாயே”**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962)**

என்பது அதில் தலைவன் தலைவியைப் பிரிந்த துயரத்தை ஆற்றமுடியாதது மட்டுமல்லாது இவள் பெற்றோர் யாரென வினவி, அவள் 'தந்தை வாழியர்' என்றும் அவள் தாயும் பொறையன் தொண்டியின் நகர் போன்றது அதுவும் எத்தகைய நகரமெனில் அகன்ற வயலிடத்து மள்ளரால் அரியப்பட்டும் அரிச்சூட்டை எடுப்போரால் கொண்டு வரப்பட்டும் அழகினையும் வலிப் தண்டினையும் உடைய கண் போன்ற நெய்தல் நெற்போரிடத்தே மலரும் திண்ணிய தேரையுடைய பொறையனின் தொண்டிநகர் போன்ற சிறப்பினைப் பெறுக என்று வாழ்த்துவதில் தலைவனின் தனி மாண்பினை அறிந்திட இயலும்.

**தலைவி வருணிப்பு :**

தலைவியினை வருணிக்கும் பொழுது ஊரின் வளத்தோடு தலைவியின் அழகினை ஒப்பிட்டு கூறும் வருணணை மரபில் நற்றிணை தலைவன் 190வது பாடலில்

**"நோ இனி வாழிய நெஞ்சே மேவார்**
**ஆர் அரண் கடந்த மாரிவண் மகிழ்**
**திதலை எஃகின் சேந்தன் தந்தை**
**தேம்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி**
**வண்டு மூசு நெய்தல் நெல் இடைமலரும்**
**அரியல் அம் கழனி ஆர்க்காடு அன்ன**
**காமர் பணை தோள் நலம் வீறு எய்திய**
**வலை மான் மழை கண் குறு மகள்**
**சில்மொழி துவர்வாய் நகைக்கு மகிழ்ந்தோயே"**

**(பின்னத்தூர் நாராயணசாமி (உ) : 1962)**

தலைவன் தன் நெஞ்சினைப் பார்த்து கூறுவதில் 'வேந்தன் தந்தை அழிசி' என்பவன் மழை போன்ற வளமையான கள்ளினையும் புள்ளிகள் படர்ந்த வேலினைக் கொண்ட சேந்தன் என்பவனின் தந்தை, தேன் கமழும் மலர் மாலையையும், சிறப்பாக செய்யப் பெற்ற தேரையும் உடைய அழிசி என வருணித்து, அந்த அழிசி ஆட்சி புரிகின்ற பூக்களிலிருந்து தேன் வழிந்தோடும் அழகிய வயல்வெளியைக் கொண்ட ஆர்க்காடு என்றும், அந்த ஆர்க்காடு போல வலையில் அகப்பட்ட மானின் கண்களையும் குளிர்ச்சியையும் கொண்ட குறுமகள் சிலமொழிகளைப் பேசும் தலைவன் கூற்றில் தந்தையின் செல்வ வளமையும், மாண்பும் குறிப்பிடப் பெற்று உள்ளன. 'தந்தை' என்னும் கருத்துரு சங்க அகப்பாடல்களில் மாண்புடையதாக சித்தரிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

**முடிவுரை:**

சங்க அகப்பாடல்களில் குறிப்பாக நற்றிணையில் தந்தை என்னும் கருத்துரு சங்க காலத்தில் தந்தையர் செல்வ வளமை கொண்டு சிறுகுடிக்கு தலைவனாக, கொடை குணம் கொண்டவராக புகழும் மதிப்பும் மிக்க மாண்பமை தந்தையாக விளங்குவதை அப்பாடல்கள் வழி அறியமுடிகின்றது. தலைவன் நோக்கிலே தந்தை தாய் இருவரையும் போற்றுவதோடு தலைவி அவர்களைப் பிரிந்து

எங்ஙனம் ஆற்றியிருப்பாளோ என்னும் வருத்தமும் தொனிப்பதிலிருந்து தந்தையின் மாண்புகளையும் தொழில் சார்ந்து தந்தையின் வலிகளையும் சுட்டி காட்டியுள்ளது. தோழிக் கூற்றில் தலைவனுக்கு தலைவியின் இருப்பிடம் கூறும்பொழுது தந்தையின் ஆற்றல், தலைமை, வலிமை,

செல்வ வளமை போன்றன குறிப்பிடப்பெற்று சங்க இலக்கியங்களில் "தந்தை" என்னும் கருத்துரு சார்ந்த அடையாளத்திற்கு இட்டுச் செல்கின்றது .

**References**

1. *Nachinarkkiniyar, Tholkappiyam (Ezhuthuthathikaram), Thirumagal Nilaiyam, Sunnagam, 1937*

2. *Pinnathur Narayanasamy, Natrinai - Molamum Uraiyum, Saiva Siththantha Nurpathippu Kazhagam, Chennai-600001, 1962*

**Cite this Article in English**

**Bagavathgeetha P " Role of Father in Sangam Poems (Agapadalkal)"** *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, Vol.1 Issue 1, July 2024, pp. 1-8*

2

# பெரும்பாணாற்றுப்படையில் வாழ்நிலைப் பதிவுகள்

## Life Aspects in Perumbanaartruppadai

**இர.மணிமேகலை,** இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத்தலைவர்.,

பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு,கோயம்புத்தூர் -641004.

**Manimegalai.R** Associate Professor and Head., Department of Tamil.,

PSGR Krishnammal College for women, Peelamedu, Coimbatore- 641004.

Orcid ID: https://orcid.org/0000-0002-7060-8551

DOI: 10.5281/zenodo.12707452

**Abstract**

*While the Sangha literatures have recorded five types of life, the article analyzed the conditions of life of the people living in these land groups.*

*The study of people's lives written in one of the Aartuppadai books, Perumbanaartuppadai, was included. A Panan received as a gift from Thondaiman Ilanthirayan. This song is about comforting a Panan who wants to receive a gift from Thontaiman Ilanthirayan sung by Uruthirang Kannan of Kadiyalur.In this book, the life s of many people like Panars, merchants, cowherds, weavers have been revealed.*

*Among them, what is the life of merchants called Einar, Panar, Umanar and Wambalar etc. has been studied. The women's skills revealed through the news such as the women collecting rice, the women selling salt, the kurambai, the houses of Einar built with Large walls Aran, the hospitality of Eyinar, etc.The views expressed include the high status of the businessman.*

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் ஐந்திணை வாழ்வைப் பதிவிட்டிருக்கின்றன என்ற நிலையில் இந்நிலப் பகுப்புகளில் வாழும் மக்கள் வாழ்வின் நிலைகளைக் கட்டுரை ஆய்வுக் குட்படுத்தியது.

ஆற்றுப்படை நூல்களுள் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் பதிவான மக்கள் வாழ்வு ஆய்வுக் குட்படுத்தப்பட்டது. பரிசில் பெற்ற பாணன் ஒருவன் தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெற விரும்பும் பாணன் ஒருவனை ஆற்றுப்படுத்துவதாக அமையும் இந்நூல் தொண்டை மான் இளந்திரையன் மீது கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாடப்பட்டது.

இந்நூலில் பாணர்கள், வணிகர், கோவலர், நெய்தல் நில மக்கள் எனப் பலரின் வாழ்வியல் செய்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றுள் எயினர், பாணர், உமணர், வம்பலர் என்று அழைக்கப்படும் வணிகர் முதலானோரின் வாழ்வு எத்தகையதாக உள்ளது என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எயின மகளிர் அரிசி சேகரித்தல், உமணர்கள் உப்புவிற்றல், எயினர் குரம்பை ,அரண் உடைய எயினர் வீடுகள், எயினர் விருந்தோம்பல் முதலான செய்திகள் வழி வெளிப்பட்ட மகளிர் திறன், எயினர் வாழ்வின் வேறுபட்ட நிலைகள், வணிகரின் உயர்நிலை உள்ளிட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**Key words :** *பெரும்பாணாற்றுப்படை உணர்த்தும் பாணனின் நிலை, எயினர், எயினி முதலானோரின் வாழ்நிலை, உமணர், வம்பலர், அவர்தம் வணிகம், எயினர் வாழிட வேறுபாடு. The status of Panan, Perumpanatrupadai Einir, Einii Mudalanor's living condition, Umanar, Vambalar, their business, Einar's place of residence.*

**முன்னுரை**

உலக வரலாற்றை நாம் இலக்கியங்களிலிருந்தும் தொல்லியல் ஆய்வுகளிலிருந்தும் கண்டறிய இயலும் என்ற நிலையில் தமிழர் தம் பண்பாட்டைத் தொன்மை இலக்கியங்களில் இருந்து ஆய்ந்தறிய முடிகின்றது. தொல் தமிழர் பண்பாட்டை ஆய்வுக்குட்படுத்துவதன் வாயிலாக சமகாலச் சூழல் தன்னை மேம்படுத்திக் கொள்ள முயல்கின்றது அவ்வகையில் திணை இலக்கியங்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை முன்வைக்கும் வாழ்நிலைப் பதிவுகளை ஆய்வுக் குட்படுத்தும் முயற்சியை இக் கட்டுரை மேற்கொள்கிறது.

பெரும்பாணாற்றுப்படையானது கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் தொண்டைமான் இளந்திரையனின் மீது பாடப்பட்டது. இளந்திரையனிடம் பரிசில் பெற்ற பெரும்பாணன் ஒருவன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்த இப்பாடலில் தொண்டை வாழ் மக்களின் வாழ்வியல் சிறப்பாகப் பதிவாகியுள்ளது.

**பாணனின் நிலை**

ஞாயிறு காயும் முது வேனில் காலத்தில் இடப்பகுதியில் அணைத்துக் கொண்ட பொன் கம்பி ஒழுகியதைப் போல் முறுக்கடங்கிய நரம்பின் கட்டமைந்த யாழுடன் புரவலனைத் தேடி எதிர்ப் பட்ட பாணனை இளந்திரையனிடம் பரிசில் பெற்று வரும் பாணன்,

**"பழுமரந் தேரும் பறவை போலக்**
**கல் என் சுற்றமொடு கால் கிளர்ந்து திரி தரும்**
**புல்லென் யாக்கைப் புலவு வாய்ப் பாண"** **(பெரும்பாணாற்றுப்படை வரி:20-22)**

என்று சுட்டுகிறான். பழுத்த மரத்தைத் தேடும் பறவைகளைப் போல பசியால் அழும் சுற்றத்துடன் பொலிவில்லாமல் கற்ற கல்வியை வெறுத்துக் கூறும் வாயினையுடைய பாணனே என்கிறான். இவ்வரிகளில் பாணனின் வறுமை தெளிவாக விளக்கமுறுகின்றது. பாணன் தான் கற்ற கல்வியை வெறுத்துப் பேசும் பாணன் என்பதால் அவன் கற்ற கல்வி அவனுக்குப் பயன் தரவில்லை. அதாவது வாழ்வு வளம் பெறாத நிலை என்பதைத் தெளிவுற விளக்குகிறது. மேலும் தான் பெற்ற பெரும் பரிசிலைப் பெற சோழர் குடியில் பிறந்த வேல் படையை உடைய அறத்தை நிலை நிறுத்திய செங்கோலையுடைய இளந்திரையனை நாடினால் பலவாறான பொருளைப் பெறலாம் என கூறப் புகும் பாணனது கூற்று பல வகைத்தான வாழ்நிலைகளை விளக்குகிறது.

**ஆறலைப்போர் இல்லா நாடு**

தொண்டைமான் இளந்திரையனின் நாடு ஆறலைப் போர் இல்லாத நாடு என்கிறான் பாணன்.

**"அத்தம் செல்வோர் அலறத்தாக்கி**
**கைப் பொருள் வெளவும் களவு ஏர் வாழ்க்கைக் கொடியோர்**
**இன்று அவன் கடியுடை வியன்புலம்"** **(பெரும்பாணாற்றுப்படை வரி:49-51)**

பெரும்பாணாற்றுப்படை எழுந்த சூழலில் ஏர்த் தொழில் சிறப்புற்றிருந்த காலகட்டத்தில் ஆறலைத்து

வாழ்வோரும் வேறு புலங்களில் இருந்திருக்கிறார்கள் என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன. இவர்கள் பொருளைக் கவர்ந்து வாழும் வாழ்வை உடைய பாலை நிலத்தவர்.

'ஐந்திணை வகைகளான குறிஞ்சி, முல்லை ,மருதம், நெய்தல், பாலை முதலான பகுதிகளில் வேட்டை சமுதாயமும் மேய்ச்சல் சமுதாயமும் மீனவ சமுதாயமும் ஒன்றாக இருந்தன'[1] (தமிழகம் பிரமிப்பூட்டும் ஒரு மக்கள் வரலாறு,ப.4) என்று மோகன்ராம் அவர்கள் குறிப்பிடுவது நினைவு கூரத்தக்கது மோகன்ராம் அவர்கள் சுட்டுவதற்கான சான்றாதாராமாக அமைகின்றன பெரும்பாணாற்றுப்படையில் வெளிப்படும் கருத்துக்கள்.

**உமணர் வாழ்வும் தொழிலும்**

பெரும் பாணனை அஞ்சாது கடக்கும்படி ஆற்றுப்படுத்தும் பாணன் உப்பை விற்று வாழும் உமணர்களைப் பற்றி அறிமுகம்செய்கின்றான்.

குழவியை உடைய உமண மகளிர் முக்கணை மீதமர்ந்து எருதின் முதுகிலே அடித்து வண்டி ஓட்டுவதைச் சுட்டுகிறான். உமணர்களின் வண்டியில் அதாவது சகடத்தில் தினைப்புனத்தில் யானை தினையைத் தின்னாமல் பாதுகாக்கும் காவல் செய்வோர் இதண் மீது கட்டிய சிறுகுடிலைப் போல சிறிதாகக் கட்டப்பட்ட கோழி இருக்கும் கூட்டினை உடைய குடிலின் வாயிலில் காடி வைக்கப்பட்ட மிடா வினை உடைய முக்கணையில் அமர்ந்து குழவியை உடைய மகளிர் எருதின் முதுகில் அடித்து ஓட்டும் வண்டி இயங்கக்கூடிய வழி என்று கூறும் பாணனின் சொற்களில் தினைப் புனத்தைக் காவல் காத்து வந்தோர் தங்கிய சிறுகுடிலைப் பற்றிய குறிப்பும் குழந்தையை ஈன்ற உமண மகள் வண்டி ஓட்டியதன் குறிப்பும் பதிவாகிறது. உமணர்கள் நிரம்பிய உடல் வலிமை உடையவராகத் திகழ்கின்றனர். ஊர் தோறும் சென்று உப்பினது விலையைப் பிறருக்குக் கூறிச் செல்லும் வழி பகலில் நெடுந்தொலைவு பயணிப்போருக்குப் பாதுகாவலாகத் திகழ்கின்றது என்ற நிலையும் சுட்டப்படுகிறது. ஏனெனில் உமணர் கூட்டமாகச் செல்வதால் ஆறலைப்போர் போன்றோரிடமிருந்து பாதுகாக்கப்படுவர்.

**வம்பலர்**

இளந்திரையனிடம் பெரும் பாணனை ஆற்றுப்படுத்தும் பரிசில் பெற்ற பெரும்பாணன் அவனது நாட்டில் உள்ள வம்பலர்களைப் பற்றிய செய்தியைப் பகிர்கிறான்.

**"மலையவும் கடலவும் மாண் பயந் தரூஉம்**
**அரும்பொருள் அருத்தந் திருந்து தொடைநோன்றாள்**
**அடிபுதை யரணம் எய்திப் படம்புக்குப்**
**பொருகணை தொலைச்சிய புண் தீர் மார்பின்" (பெரும்பாணாற்றுப்படை.வரி67-70)**

என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகள் வம்பலரைப் பற்றி விரிவாக விளக்குகின்றன.

மலையிலும் கடலிலும் விளையும் மாண்புடைய பெரும் பயனைக் கொடுத்துப் பெறுவதற்கு அரிதான பொருளைப் பெற்றுத் தன் சுற்றத்தினரை உண்ணச் செய்யும் தான் தொடங்கிய செயலிலிருந்து பின்வாங்காத முயற்சியையும் அடி மறையும் படி செருப்பை அணிந்த அடியினையும் சட்டை அணிந்த உடலையும் ஆறலைப்போர் எய்த அம்பின் வலியைத் தொலைத்த மார்பினையும் மார்புக் கச்சில் ஒள்ளிய வாளினையும் உடைவாள் செருகப்பட்ட குறுகிய உடையையும் ஆறலைப் போரின் வில்லின் வலிமையைத் தொலைத்த வலிமையான தோளினையும் கடம்பில் அமர்ந்த முருகனைப் போன்ற மீட்டெடுக்கும் இயல்பையும் வேலையெந்திய கையையும் பிறருக்குப் புறமுதுகிடாத

தன்மையையும் உடைய வம்பலர்.

வம்பலர் என்ற சொல்லுக்கு வழியில் செல்வோர் என்பது பொருள். வம்பலர் நிலை சற்று உயர்ந்த நிலையில் இருப்பதை வரிகள் தெற்றன விளக்குகின்றன. பெரும் பயனைக் கொடுத்து பெறுவதற்கு அரிய பொருளைப் பெற்று தன் சுற்றத்தை உண்ணவைக்கும் வம்பலர் வளம் பெற்றவர்களாயிருக்கிறார்கள். மேலும் செருப்பணிந்த பாதங்களும் சட்டை யணிந்த உடலும் வம்பலரின் சிறந்த வாழ்க்கைத் தரத்தைச் சுட்டுகின்றன. அத்துடன் ஆறலைப் போரின் வில் வலிமையைத் தொலைத்தவர் என்பதில் அவர்தம் வீரமும் வெளிப்படுகின்றது.

இளந்திரையனது தொண்டை நாட்டில் வம்பலர்கள் மிளகின் பொதிகளைச் சுமந்த கழுதைகளைச் சுங்கம் செலுத்தும் பெரிய வழிகளில் திரளாக அதாவது சாத்தாக அழைத்துச் செல்கின்றனர். அவர்கள் சுங்கம் செலுத்திச் சென்றனர் என்பது சுட்டதக்கது. எனவே இவர்கள் புதியர். வழிச்செல்வோர் கழுதைச் சாத்துடன் பயணிக்கும் நெடு வழிகளை உடையன தொண்டை நாட்டின் ஊர்கள்.

**எயினர் குரம்பை**

பாலை நிலத்தில் வாழ்ந்த மக்கள் எயினர் எயிற்றியவர் என்று குறிப்பிடப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன[2].(சங்க மரபு.,ப.225) பெரும்பாணாற்றுப் படை எயினர் குரம்பைகளைக் குறிப்பிடுகின்றது. ஈந்திலையால் வேயப்பட்ட முகட்டையும் எய்ப்பன்றியின் முதுகுபோலும் புறத்தையும் உடையதுமான குடில் எயினர்களுடையது.

இக்குடிலில் மான் தோல் படுக்கையில் ஈன்ற பிள்ளையுடன் முடங்கிக் கிடக்கும் எயிற்றியைத் தவிர ஏனைய எயிற்றியர் பூண் கட்டப்பட்ட சீரிய கோல் செருகப்பட்ட உளி போலும் வாயைக் கொண்டிருக்கக் கூடிய பாரைகளாலே கரிய கரம்பு நிலத்தைக் குத்திக் கிளறி புழுதியை அளைந்து புல் அரிசியை வாரிக் கொள்கின்றனர். அப்புல்லரிசியைத் தோண்டிய நில உரலில் இட்டு வைரமான உலக்கையால் குற்றுகின்றனர். புல்லரிசியை உண்டு வாழும் எயின மகளிரில் ஈன்ற அணிமையுடைய பெண்கள் வீட்டில் தங்க எஞ்சியவர் அரிசி சேகரித்தனர் என்ற நிலையை உணர முடிந்தது மேலும் எயினப் பெண்கள் உளி போன்ற வடிவமுடைய ஆயுதங்களைப் பயன்படுத்தி புல்லரிசியைச் சேகரித்தினர் என்பதையும் உணர்ந்து கொள்ள முடிந்தது.

மனிதன் வேட்டையாடி உணவு தேடிய காலத்தில் ஆண்களே வேட்டைத் தொழில் செய்தனர். அவர்களே சமுதாயத்தில் ஆதிக்கம் செய்தனர். அதனால் பெண்கள் குகைகளிலும் குடிசைகளிலும் தங்கினார். அவர்கள் செடி, கொடிகளைக் கண்டனர். அவற்றின் இனப்பெருக்கத்தை அனுபவத்தில் கண்டனர். இயற்கையைப் பின்பற்றி தாங்களும் கொட்டைகளைப் பூமியில் விதைத்தனர். விதைகளை நிலத்தில் ஊன்றினர். கிழங்குகளை நிலத்தை அகழ்ந்து புதைத்து மூடினர். அவை வளர்ச்சியுற்று பலனளித்தன. இவ்வாறு பண்டை பயிர்த்தொழில் தோன்றிற்று. வேட்டைத் தொழிலிலிருந்து கிடைப்பதை விட பயிர்த்தொழிலிலிருந்து அதிகமாக உணவு கிடைத்தது. முதலில் பெண்களே பயிர்த் தொழிலில் ஈடுபட்டனர் .அவர்களே பயிர்த் தொழிலைக் கண்டுபிடித்தனர்" என்ற நா. வானமா மலை அவர்களின் கூற்று குறிப்பிடத்தக்கது.[3] (தமிழர் வரலாறும் பண்பாடும்,ப.71) பெரும்பாணாற்றுப்படையில் எயின மகளிர் புல்லரிசியைச் சேகரித்தது அவர்களுடைய தனித்திறனை வெளிப்படுத்துவதாகிறது. வேளாண் தொழிலில் பெண்களுக்குரிய தொடர்பை உணர்த்துவதாகிறது.

எயினரின் எளிய வாழ்வைப் பெரும்பாணாற்றுப்படை உணர்த்தும் அதே வேளையில் அவர்தம் விருந்தோம்பல் சிறப்பையும் விளக்கியுள்ளது. எயினர்களிடம், தும்பை சூடிய போரில் வல்லவனும்

*மறவரின் தலைவனாகிய வீரக்கழல் அணிந்தவனும் போர்த் தொழிலில் வல்ல வீரர் தலைவனும் புறமுதுகிடாத படையை உடையவனும் மலை நாட்டை உடையவனுமாகிய இளந்திரையனின் பாணர் சாதியம் என்று நீங்கள் கூறினால் தெய்வத்திற்குப் பலியிடுவது போலத் தேக்கிலையிலே விளிம்பு உடைந்த பானையில் கழுவாத நீரில் சமைத்த கருவாட்டுடன் கூடிய சோற்றைப் பலியிடுவர். தேக்கிலையிலே கடவுளுக்குப் பலியிடுவது போலப் பலியிடுவர் என்றது பாணரின் உயர்நிலையை இளந்திரையனின் மேன்மையைச் சுட்டுவதாகிறது.*

*மேலும் ,"ஊகம் புல்லால் வேயப்பட்ட உயர்ந்த நிலையை உடைய மதிலையும் அம்புக் கட்டினையும் துடிகள் தொங்கும் நாய்களைக் கட்டி வைத்த காவலையுடைய வீடுகளை உடைய எயினர் அரண்களில் சென்று தங்கினால் சிவந்த சோற்றுடன் உடும்பின் பொரியலால் மறைக்கப்பட்ட உணவை வீடுகள் தோறும் பெறுவீர்" என்கிறான். எயினர் அரண்களில் வசிப்பவர்கள் பாலை நிலத்துச் சிற்றரசர்கள். தலைவனைப் பின் தொடரும் நாய்களைக் கட்டி வைத்த வீடு என்பதால் இவ்வீடுகள் வளம் நிறைந்தவை. இவர்களை மோகன்ராம் அவர்கள் வேளாண் நிலப் பிரபுக்கள் என்று குறிப்பிடுகிறார்.*

*"நிலமற்ற விவசாயிகள் வரகரிசியைக் கொண்டு வயிறு நிரப்ப இவர்கள் உழைப்பில் கிடைக்கும் வெண்ணெல் அரிசியை வேளாண் நிலப் பிரபுக்கள் பெட்டைக்கோழிப் பொரியலோடு உண்டு வாழ்ந்தனர் என்று கூறுகிறார் மோகன் ராம். (தமிழகம் பிரமிப்பூட்டும் ஒரு மக்கள் வரலாறு,ப.6) எயினர் வாழ்விலேயே படிநிலைகள் இருந்ததை எயினர் குரம்பையும் எயினர் அரண்களும் அறிவுறுத்துகின்றன.*

*பெரும்பாணாற்றுப்படை மேலும் கோவலர் இருக்கை, மறவர் வாழிடம், முல்லை நிலத்து உழுதுண்பார் சேரிகள் எனப் பல வகைத்தான வாழ்நிலைகளைப் பதிவு செய்துள்ளது. உழுதுண்போர் வாழும் சீறூர்கள், நெய்தல் நில மக்களின் வாழ்வு, அந்தணர் இல்லத்தின் சிறப்பு எனப் பல்வகைத்தான பண்பாடுகளைப் பதிவிட்டுள்ளது. இவை ஆய்வு குரியவை.*

**தொகுப்புரை :**

*பத்து பாடல்களுள் ஒன்றான கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் தொண்டைமான் இளந்திரையின் மீது பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படையில் பாணர்கள், உமணர்கள், எயினர்கள், உழவர் கானவர் ,அந்தணர் முதலானோரின் வாழ்வு குறித்த பதிவுகளைக் காண முடிந்தது.*

- ➢ *பரிசில் பெறும் பாணன் கற்ற கல்வியை வெறுக்கும் வறுமை நிலையில் இருக்கிறான். இளந்திரையனிடம் சென்றால் அவன் கற்ற கல்வி பயன்பெறும். அதாவது வாழ்வு வளம் பெறும் என்ற சிந்தனை பதிவாகிறது.*
- ➢ *பாணர்கள் தான் கற்ற கல்விப் புலமையைப் பயன்படுத்தி வள்ளலின் வள்ளண்மை , வீரம் உள்ளிட்ட பல சிறப்புகளைப் பதிவிட்டு வாழ்வை வளமாக்கிக் கொண்டனர்.*
- ➢ *தொண்டைமான் இளந்திரையனின் நாட்டில் நெடு வழிகளில் வணிகர்களின் சாத்து பயணித்த நிலையில் ஆறலைப்போர் வழிகளில் பயணிக்கவில்லை. ஆறலைப் போரின் வலிமையை வம்பலர் எனப்படும் வணிகர்கள் வீரத்தால் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள் .இந்த வம்பலர் மிளகுப் பொதியைச் சுமந்து செல்லும் கழுதைகளைத் திறளாக ஓட்டிச் சென்று வணிகம் செய்யும் வம்பலர்கள். இவர்களின் வாழ்வு வளம் மிக்கதாய் இருந்திருக்கிறது.*
- ➢ *உமண மகளிர் வண்டி ஓட்டுகின்றனர். ஊர் தோறும் சென்று உப்பை விலை கூறி*

விற்பவர்களாக உமணர்கள் வாழ்கின்றனர். பாலை நிலத்தில் வாழும் எயினர் ஏயிற்றியர் ஈந்திலையால் வேயப்பட்ட குடிலில் வாழ, நிலப்பிரபுக்கள் என்ற நிலையில் வாழ்ந்த குறுநில மன்னர்களாகத் திகழ்ந்த எயின மரபினர் வீடுகளிலோ, சிவந்த சோற்றுடன் உடும்பின் பொரியல் பரிமாறப்படுகிறது.

- ஈந்திலையால் வேயப்பட்ட எயினர் குடிலில் உடைந்த பானையில் சமைத்த சோறுடன் கருவாடு பரிமாறப்படுகிறது. எயினர் வாழ்நிலையில் ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டுவதாக இத்தகைய பதிவுகள் அமைகின்றன.
- எயினர்கள் மறவர் தலைவனிடம் கட்டுப்பட்டு வாழ்ந்ததை இளந்திரையனின் பாணர்களுக்கு எயினர் கடவுளுக்குப் படையலிடுவது போலப் படையலிடுவர் என்பதிலிருந்து உணர முடிந்தது. மக்களின் தொழிலுக்கு ஏற்ற வாழ்வைப் பெற்றிருந்தார்கள் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை தெற்றென விளக்குகிறது.

**துணைநூற்பட்டியல் :**


1. *Pathuppattu Part1 Narrator Po. Way. Somasundaran, Thirunelveli South India Saiva Siddhantha Literary Institute, 522 TK Road Alwarpet, Chennai 18*
2. *Tamil History and Culture,N. Vanama Mazhai, New Century Book House ,Pvt Ltd Chennai -98 Sixth Edition July 2007*
3. *Tamil Nadu has an amazing history of its people., Dr. K. Mohanram,Dr. A. K Kalimuthu, Jassim Publishing House, Trichy-620023,October 2009.*
4. *'Sanga legacy' Tamilannal, Parameshwari Graphics,Chennai .First edition. 2002.*


**Cite this Article in English**


**Manimegalai.R "Life Aspects in Perumbanaartruppadai"** *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, Vol.1 Issue 1, July 2024, pp. 9-14*

**3**

# பெண் பிறப்பு அடிப்படையிலான பாலின வேறுபாடு – வாஸந்தி புதினங்களை முன்வைத்து

# Gender Discrimination Based on Female Birth – Presenting Vasanthi Novels

**வீ. மீனாட்சி,** *உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி-6210017*

**Meenakshi.V,** *Assistant Professor, Department Of Tamil Studies, Bishop Heber College, Trichy-6210017*

**ORCiD: https://orchid.org/0000-0003-0537-1268**

**DOI: 10.5281/zenodo.12707475**

**Abstract**

*The human race created by nature is a composite body with equal contribution of both sexes, male and female. However, certain norms and customs established by society over time have been constructed differently for both sexes. These structures were designed to make men superior and women inferior, thus relegating the female gender to a secondary status that continues today. The idea that female children are an economic burden in the society is still rooted in the society due to this structural system. Based on this, in Vasanthi's novels, the female child is destroyed while still in the mother's womb, and the female children who escape the womb murder and die of starvation and the girls who escape these two stages are sheltered in orphanages. Based on gender difference, this article aims to clarify the ability to analyze the reason why the birth of male children is welcomed and the reason why the birth of female children is hated and to highlight the methods to eliminate this.*

**ஆய்வுச்சுருக்கம்**

இயற்கை படைத்த மனித இனம் என்பது ஆண் பெண் என்ற இரு பாலினங்களின் சமமான பங்களிப்பு உடைய கூட்டுத் தொகுதி ஆகும். இருந்த போதிலும் காலம் தோறும் சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட சில நெறிமுறைகள் பழக்க வழக்கங்கள் இரு பாலினத்திற்கும் வெவ்வேறாக கட்டமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டமைப்புகள் ஆணுக்கு உயர்வானதாகவும் பெண்ணிற்கு தாழ்வானதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன .இதனால் பெண்பாலினமானது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்ட சூழல் இன்றும் தொடர்ந்து வருகிறது. இக்கட்டமைப்பு முறையால் சமூகத்தில் பெண் குழந்தைகள் பொருளாதார சுமையை ஏற்படுத்துகின்றவர்கள் என்ற கருத்து இன்றும் வேரோடி இருக்கின்றது இதன் அடிப்படையில் வாஸந்தியின் புதினங்களில் பெண் சிசுக்கல் தாயின் கருவறையில் கருவாக இருக்கும் நிலையிலேயே அழிக்கப்படுவதையும் கருவறை கொலையில் இருந்து தப்பி உலகிற்கு வந்த பெண் குழந்தைகள் கள்ளிப்பால் புகட்டப்பட்டு இறப்பதையும் இந்த இரு நிலைகளில் தப்பித்த பெண் குழந்தைகள் அனாதை விடுதிகளில் அடைக்கலம் அடைவதையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைவதுடன் சமூகத்தில் பாலின வேறுபாட்டின் அடிப்படையில் ஆண் குழந்தைகள் பிறப்பு என்பது வரவேற்கப்படுவதற்கான காரணத்தையும் பெண் குழந்தைகள் பிறப்பது வெறுக்கப்படுவதற்கான காரணத்தையும் ஆராய்ந்து இதனை களைவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைக்கும் திறத்தை தெளிவுபடுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords:** *Gender, Femicide, Female Feticide, Individual Qualification Status,* பாலினம்,

பெண்கருக்கொலை, பெண்சிசுக்கொலை, தனிமனிதத் தகுதி நிலை

மனித இனம் என்பது ஆண் பெண் என்ற இருபாலினங்களின் சமமான பங்களிப்பு உடைய கூட்டுத்தொகுதியாக படைக்கப்பட்டுள்ள நிலையில் சமூகக்கட்டமைப்புகள் ஆணிற்கு உயர்வான நிலைப்பாட்டினையும் பெண்ணிற்குத் தாழ்வான நிலைப்பாட்டினையும் உருவாக்கியுள்ளனர். இதனடிப்படையில் வாஸந்தியின் புதினங்கள் பெண் பாலினமானது பிறப்பு நிலையில் பெண் கருக்கொலை, பெண் சிசுக்கொலைக்கு ஆளாவதையும் சமூகத்தில் பெண் குழந்தைகள் வெறுப்பிற்கான காரணத்தையும் அதனை களைவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைக்கும் திறத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

காலமாற்றத்திற்கு ஏற்பக் கருத்தாக்கங்கள் மாறி வருகின்றன. அதற்கேற்றால் போல் மனித வாழ்க்கை முறையிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இயற்கை படைத்த மனித இனத்துள் ஆண்-பெண் என்ற ஏற்றத்தாழ்வு நிலை இன்றும் இருந்து வருகிறது. ஆண் பாலினம் என்பது முதன்மை தன்மை உடையது பெண் பாலினம் என்பது இரண்டாம் நிலை உடையது என்று சமூகம் உருவாக்கியக் கருத்துருவாக்கங்கள் (Ideology) இந்நாளிலும் சமூகத்தில் நடைமுறையில உள்ளன. சமூகம் ஏற்படுத்தியுள்ள இத்தகைய கருத்துருவாக்கத்தால் ஏற்பட்டுள்ள “பாலின வேறுபாடு பாராட்டல்” என்பது ஒரு பெண்ணின் பிறப்பு (Gender inequality) முதல் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வருகிறது. இதனடிப்படையில் வாஸந்தியின் கடைசிவரை, கடைபொம்மைகள் எனும் இரு புதினங்கள் வழி பெண் பிறப்பு அடிப்படையிலான பாலின வேறுபாடு குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சமுதாய வளர்ச்சிப் போக்கில் பாலின வேறுபாடு**

ஆதி சமூகமான வேட்டைச் சமூகம் ஆண்-பெண் என்ற பாலின வேறுபாடு இல்லாத சமூகமாக இருந்திருக்கிறது. பெண்ணைக் குழந்தை பெறும் ஆற்றல் பெற்றவளாக இயற்கை படைத்துள்ளதால் அவள் தெய்வமாகப் போற்றப்பட்டிருக்கிறாள். அச்சமூகத்தில் ஆண் குழந்தை, பெண் குழந்தை என்ற வேறுபாடு அமைந்திருக்கவில்லை என்பதை,

“ஒரு மகவைப் பெறும் தாய்ச் சக்தியை அற்புதமாகக் கண்டனர். எனவே பெண், சவர் சக்தியுடையவளாக அறியப்படலானாள். இயற்கையுடன், ஆணைவிட இவள் மிக நெருக்கமாக, நீராக, கல்லாக, கனியாக, இருக்கக்கூடிய எதிர்மறைத் தனமைகளைப் பண்புகளாகக் கொண்டவளாகப் பெண்ணை இனம்கண்டு கொண்டனர். இவள் வேட்டையாடினாள், குருதி கண்டஞ்சவில்லை. பகைவர்களை மூர்க்கமாக எதிர்த்தாள். அகங்காரமும் பழிவாங்கும் குற்றமும் இவளுக்குப் புறம்பானவை அல்ல என்றாலும் அன்பே உருவானவளாகத் திகழ்ந்தாள். தன் உதிரத்தைப் பாலாக்கி, மக்களுக்கு அமுதூட்டினாள். வாஞ்சையும் பரிவுமாகப் பேணி வளர்த்தாள். கொடிய நோவையும் துன்பங்களையும் தான் ஏற்று மக்களைப் பாதுகாத்தாள். இப்படிப் பிறவி கொடுத்த காரணத்தால், ‘ஜனனி’ என்று அறியப்பட்டாள். இவளால் உயிர் பெற்று உலகுக்கு வந்த மக்கள் ‘ஜனம்’ என்ற சொல்லால் அறியப்பட்டார்கள். ‘ஜனம்’ என்ற சொல்லில் ஆண்-பெண் பேதம் இல்லை (இராஜம்கிருஷ்ணன், காலந்தோறும் பெண், பக் 5, 6) எனும் இராஜம்கிருஷ்ணன் கருத்தால் அறியமுடிகிறது.

இத்தகைய வேட்டைச் சமூகத்தில் மக்கள் குழுக்களாக வாழ்ந்திருக்கின்றனர். இந்தக் குழுக்கள் பின்னர் தாயாண்மைச் சமூகமாக மாற்றம் பெற்றுள்ளன. அதில் பெண்ணுக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டு இருக்கிறது. தாயாண்மைச் சமூகத்திற்குப் பின் ஏற்பட்ட வேளாண் சமூகத்தில் ஆணின் பொருள் உற்பத்தித் தொடர்பான பணி முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பெண்ணின் பொருள் உற்பத்தி

தொடர்பான பணி இரண்டாம் நிலைக்கும் தள்ளப்பட்டன. பெண் குழந்தைகளைச் சுமையாகக் கருதும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனை

"ஆண் மையமிட்ட இந்தியச் சமவெளி வேளாண் முறையில் பெண் குழந்தைகள் பொருளாதாரச் சுமையாக மாற்றம் பெற்றார்கள். இதனால் பெண் குழந்தைக்கொலை, வரதட்சிணை ஆகியன இப்பொருளாதார முறையின் ஒரு பகுதியாக அமைப்பாக்கம் பெற்றன எனப் பண்பாட்டு பொருள் முதல்வாதக் குழுவைச் சேர்ந்த மர்வின் ஹேரிஸ் குறிப்பிடுகிறார்" (பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள் ப.134)

என்பதன் மூலம் உறுதிசெய்ய முடிகிறது. இதனடிப்படையில் தாய்வழிச் சமூகத்திற்குப் பின் ஏற்பட்ட தந்தைவழிச் சமூக அமைப்பில் பெண்கள் பொருளாதார சுமையாக கருதப்பட்ட நிலையானது இன்றுவரை நில வருகிறது. இத்தகைய ஆண் பெண் பாலின அடிப்படையில் பிறப்பு நிலையில் காட்டப்படும் ஏற்றத்தாழ்வு முறையினை வாஸந்தி தனது புதினங்களின் வழி முன்நிறுத்துவதை பின்வரும் பகுதி எடுத்துரைக்கிறது.

**பெண் குழந்தையைக் கருவிலேயே அழித்தல்**

ORCID ID: https://orcid.org/ 0009-0002-4583-9347

DOI: 10.5281/zenodo.12707500

**Abstract**

*In every landscape of the world, primitive man lived a life in harmony with nature. Then, as a result of creating the things necessary for his life from nature, he has reached the stage of cultural development as a civilized human race, different from other creatures. Since culture is adapted to the land structure where people lived, it is clear that culture found in a particular land is different from other lands because of the land structure in which it was formed. Also, it is significant that the culture differs from land to land, as the hilly Kurinji land is full of animals and birds, where 'hunting' is the primary occupation, and the field-based Marutha land is a plain, where 'farming' is the primary occupation. So it is clear that culture has been associated with the land system where man lives.*

*The Sangam literature, which records the ancient history of Tamil people, depicts the way of life of the Sangha Tamil people in association with the Tamil land they lived in. In those literatures, Tamil land is classified into five types of land namely Kurinji, Mullai, Marutham, Neythal and Paalai. Based on that, it is possible to learn about the natural environment in those lands and the way of life of the people that has evolved from it.*

*Among the Sangam literatures that describe the bond between nature and man, Paripaadal, which is placed as the fifth text, that elaborates the cultural history of Madurai, one of the cultural regions of South Tamilnadu. It is possible to know that there were three types of land in Madurai. They were located in Madurai as three lands namely Kurinji which is hilly, Mullai which is forest and Marutham which is river plain. All three types of land are mentioned in Paripaadal as Tiruparangunram, Thirumaliruncholaimalai and Vaiyai Aaru respectively. The natural resources of those lands have also contributed to the cultural development of Madurai.*

*Among them, the land structure of the Vaiyai River has been the primary factor for the social, political and economic development of Madurai. Therefore, the purpose of this article is to explore the Vaiyai land system and the water-based cultures that it created, using the approach of "cultural geography" which examines the relationship between people and the land as Paripaadal explains the land structure and its cultures of Madurai.*

**ஆய்வுச் சுருக்கம்:**

உலகிலுள்ள ஒவ்வொரு நிலப்பரப்பிலும், தொடக்க கால மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளான். பின், அவ்வியற்கையிலிருந்து தன் வாழ்க்கைக்கு

தேவையானவற்றை உருவாக்கிக் கொண்டதன் விளைவாக, மற்ற உயிரினங்களிடமிருந்து வேறுபட்டு, நாகரீகம் பெற்ற மனித இனமாகப் பண்பாட்டு வளர்ச்சி நிலையை அடைந்திருக்கின்றான். அப்பண்பாடானது, அம்மக்கள் வாழ்ந்த நில அமைப்புக்கு ஏற்றவாறு அமைந்திருப்பதால், ஒரு குறிப்பிட்ட நிலத்தில் காணப்படும் பண்பாடானது, மற்ற நிலங்களிலிருந்து வேறுபட்டு தோன்றுவதும், அதற்கு அது உருவான நிலஅமைப்பே காரணமாவதும் தெளிவாகிறது. மேலும், மலைப்பாங்கானக் குறிஞ்சி நிலத்தில் விலங்குகளும், பறவைகளும் நிறைந்து இருப்பதால் அங்கு "வேட்டையாடுதல்" முதன்மைத் தொழிலாகவும், வயல் சார்ந்த மருத நிலம் சமவெளிப் பகுதியாக உள்ளதால் அங்கு "வேளாண்மை" முதன்மைத் தொழிலாகவும் விளங்குவதால், அதன்வழி நிலத்துக்கு நிலம் பண்பாடு வேறுபடும் என்பதை அறியலாம். எனவே பண்பாடு என்பது மனிதன் வாழும் நில அமைப்புடன் இணைந்ததாகவே இருந்துள்ளது புலனாகிறது.

தமிழரின் தொன்மையான வரலாற்றினைப் பதிவு செய்துள்ள சங்க இலக்கியங்கள், சங்கத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறையை, அவர்கள் வாழ்ந்த தமிழ்நிலத்துடன் இணைத்தே காட்சிப்படுத்தியுள்ளன. அவ்விலக்கியங்களில், தமிழ் நிலமானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அந்நிலங்களிலுள்ள இயற்கைச் சூழலும், அதனால் உருவான மக்களின் வாழ்க்கை முறையையும் குறித்து அறிந்து கொள்ள இயலுகிறது.

இயற்கைக்கும் மனிதனுக்குமானப் பிணைப்பை விவரித்துள்ள சங்க இலக்கியங்களுள், ஐந்தாவதாக வைக்கப்பட்டுள்ள பரிபாடல், தென் தமிழகத்தின் பண்பாட்டுப் பகுதிகளில் ஒன்றான, மதுரையின் பண்பாட்டு வரலாற்றினை விரிவாக எடுத்துரைக்கின்றது. அம்மதுரையில் மலை சார்ந்த குறிஞ்சி, காடு சார்ந்த முல்லை, ஆற்றுச்சமவெளி சார்ந்த மருதம் ஆகிய மூவகை நிலப்பகுதிகள் அமைந்திருந்தது.அம்மூவகை நிலப்பகுதிகளும் முறையே திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலை, வையை ஆறு என்னும் பெயர்களில் பரிபாடலில் பாடப்பட்டுள்ளன. அதில் அந்நிலங்களின் இயற்கை வளங்களும், அங்கு நிலவிய பண்பாடுகளும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், வையை ஆற்றின் நில அமைப்பானது, மதுரையின் சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மைக் காரணியாகத் திகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆகவே மதுரையின் நில அமைப்பையும், அதன் பண்பாடுகளையும் பரிபாடல் விளக்குவதால் மக்களுக்கும் நிலத்துக்கும் உள்ள தொடர்பை ஆய்வு செய்யும் "பண்பாட்டு நிலவியல்" எனும் அணுகுமுறையை பயன்படுத்தி, வையை நில அமைப்பையும் அது உருவாக்கிய நீர் சார்ந்த பண்பாடுகளையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**Keywords**

*பண்பாட்டு நிலவியல் (cultural Geography),நில அமைப்பு (landscape), நிலவியல் தீர்மானவாதம் (geographical determinism), புனல்விழா, இடவியல் ஆய்வு, நீரங்காடி*

**முன்னுரை:**

உலகில் உள்ள ஒவ்வொரு நிலப்பரப்பிலும் வாழும் மக்கள், அங்கு இயற்கையாக கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி நாகரீகமாக வாழ்வதற்கு பழகிக் கொண்டனர். அதுவே அவர்களது வாழ்க்கை முறையாகவும் திகழ்கின்றது. அவ்வாழ்க்கை முறையானது, அவர்கள் வாழும் குறிப்பிட்ட நிலப்பகுதிக்குப் பொருந்துமாறு அமைந்திருப்பதால், அது இடத்திற்கு இடம் மாறுபட்டு தோன்றுகிறது. ஆகவே மக்களுக்கும் நிலத்திற்கும் உள்ள தொடர்பினை அப்பகுதியில் அமைந்துள்ள பண்பாட்டினைக் கொண்டு அறிந்துகொள்ளலாம். அவ்வகையில், தமிழர்களின் வாழ்க்கை

முறையானது, தமிழகத்தின் நில அமைப்புடன் தொடர்புடையதாக விளங்குகிறது என்பதை தமிழின் தொன்மையானச் செவ்வியல் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுவதால், சங்ககாலத்து நிலம் சார்ந்த பண்பாட்டு வளர்ச்சி நிலையை அறிந்து கொள்ள முடிகிறது. அதுபோல் பண்டைய வரலாற்றினைப் பேசும் சங்க இலக்கியங்களுள் ஒன்றான பரிபாடல், அக்கால மதுரையின் நில அமைப்பினையும், அதனால் உருவானப் பண்பாட்டினையும் எடுத்தியம்புகின்றது. அவ்வாறு பரிபாடல் குறிப்பிடும் மதுரையின் நில அமைப்புகளில் ஒன்றான மருத நிலத்து வையை ஆற்றின் நில அமைப்பு (landscape) குறித்தும், வையை சார்ந்து உருவான பண்பாடு குறித்தும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது..

**பண்பாட்டு நிலவியல்:**

தொடக்க காலங்களில் மனிதன் தான் வாழ்ந்த நிலப்பரப்பில், இயற்கையாகக் கிடைத்த பொருட்களைப் பயன்படுத்தி வாழ்வதற்குக் கற்றுக் கொண்டான். அவ்வாறு கற்றுக்கொண்டதன் விளைவாக, முதலில் நாடோடியாக வேட்டையாடி வாழ்ந்தவன், பின் நிலையாக ஓரிடத்தில் தங்கி, இருப்பிடம் அமைத்தும், வேளாண்மை செய்தும், பண்பட்ட வாழ்க்கை முறையை உருவாக்கிக் கொண்டான். அதன் தொடர்ச்சியாகப் பொழுதுபோக்கு, கலைநுட்பம், சமயம், வாழ்வியல் நெறிமுறைகள், அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் தோற்றம் பெற்று, மனித சமுதாயம் வளர்ச்சியடைந்தது. அதனால் பண்பாடு என்பது மக்களின் முழுமையான வாழ்க்கை முறையைக் குறிக்கும் என்பது புலனாகிறது. அத்தகையப் பண்பாடானது நிலவியலுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது. அதனால் தான், நிலவியலாளர்கள் பூமியின் நிலவியலை ஆராயும் பொழுது, அங்கு வாழ்ந்த மக்களின் பண்பாட்டையும் இணைத்தே ஆய்வு செய்கின்றனர். பின்னாட்களில் அம்முறையானது 'பண்பாட்டு நிலவியல்' என்னும் அணுகுமுறையாகத் தோற்றம் பெற்றுள்ளது. இதனை,

> "ஒரு சுற்றுச்சூழலில் புதிதாகக் குடியமர்வோர் வந்து சேரும்போது கொண்டுவரும் கூறுகளையும், அப்பகுதியிலேயே காலம் காலமாக வாழ்ந்துவரும் மக்கள் அந்த சூழலோடு ஏற்படுத்திக் கொண்டுள்ள தகவமைப்புக் கூறுகளையும் ஆராயும் நோக்கில் மானிடப் புவியியல் அல்லது பண்பாட்டுப் புவியியல் பிரிவை பிரட்ரிக் ரட்சல் தோற்றுவித்தார்"
>
> (பக்தவத்சல பாரதி-2017: பக்- 57,58)

என்று மானிடவியல் அறிஞர் குறிப்பிடுவதின் வழி அறியலாம். அதனடிப்படையில், மனிதனுக்கும், அவன் வாழும் நிலப்பரப்பிற்குமானத் தொடர்பினை ஆராய்வதற்குப் 'பண்பாட்டு நிலவியல்' எனும் அணுகுமுறை துணை புரியும் என்பது தெளிவாகிறது.

**நில அமைப்பு (landscape):**

பண்பாட்டு நிலவியல் அணுகுமுறையின் கூறுகளில் ஒன்றான நிலமைப்பு என்பது புவியின் மேற்பரப்பில் காணப்படும் மலைகள், காடுகள், நீர்நிலைகள் (கடல்,ஆறு,அருவி,சுனை,குளம்), மணல் பரப்புகள், தாவரங்கள், உயிரினங்கள் போன்ற இயற்கை கூறுகளையும், அவற்றால் உருவான மனித பண்பாட்டையும் உள்ளடக்கியதாகும். அந்நில அமைப்பானது நிலவெளி, நிலப்பரப்பு, இயற்கை அமைப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. இதனை,

> "ஒரு நிலப்பரப்பு அதனுடைய அமைப்பினாலும், பண்பாட்டினாலும் உருவாகியிருப்பதைக் குறிப்பதே நிலவெளியாகும்" (கார்ல் சாசர்- 1983: ப-321)

எனும் கருத்தின் வழியாக அறிந்து கொள்ளலாம். நிலவியல் அறிஞரான கார்ல் சாசர் குறிப்பிடும் நில அமைப்பானது, தமிழ் நிலத்தில், மலை சார்ந்த பகுதி குறிஞ்சி, காடு சார்ந்த பகுதி முல்லை, ஆற்றுச்சமவெளிப் பகுதி மருதம், கடல் சூழ்ந்த பகுதி நெய்தல், வறண்ட மணற்பரப்புள்ள வறட்சிப் பகுதி பாலை என்பனவாக ஐவகை நிலப் பிரிவுகளால் அமைந்துள்ளது. அவை ஒவ்வொன்றும் தனித்தன்மையுடனும், ஒன்றோடொன்று தொடர்புடையனாகவும் விளங்குகின்றன. இத்தகைய அமைப்பு முறையை சங்க இலக்கியங்கள் தன்னகத்தே கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**சங்க இலக்கியமும் நிலஅமைப்பும்:**

தமிழரின் பண்டைய வரலாற்றை அறிந்து கொள்ள சான்றாக விளங்கும் சங்க இலக்கியங்கள், ஐவகை நிலப்பிரிவுகளையும், அங்கு வாழ்ந்த மக்களின் நிலம் சார்ந்த வாழ்க்கை முறையினையும் காட்சிப்படுத்தியுள்ளன. அதன் வழியாக சங்க மக்களின் பண்பாட்டு நிகழ்வுகளை அறிந்து கொள்ள முடிகிறது. எனவே அவ்விலக்கியங்கள் சங்ககாலத்து நில அமைப்பினையும், அதனோடு தொடர்புடைய மக்களின் வாழ்வியலையும் பேசுவதால்,'பண்பாட்டு நிலவியல்' அணுகு முறையில் அக்காலப் பண்பாட்டினை ஆராய்வதற்கு அவை நிலைக்களனாகவும் அமைகின்றன. இத்தகைய அணுகுமுறையின் இன்றியமையாமையினை,

> "காலம், இடம் போன்றவை முக்கிய இடம் பெறும் சங்க இலக்கியங்களால் வரலாற்றுச் சம்பவங்களும் பருண்மையானச் சிறப்புக் கூறுகளும் விவரிக்கப்படுகின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்களில் தொல்லியல், பண்பாட்டு நிலவியல் ஆகியவற்றின் கருத்தாக்கங்களைப் பயன்படுத்தி அணுகும் முறை இன்றியமையாதது"

(ஆ.தனஞ்செயன்- 2010: ப-33)

எனும் இக்கூற்றின் வழி அறிந்து கொள்ளலாம். அக்கருத்தானது, சங்க இலக்கியத்தில்'பண்பாட்டு நிலவியல்' அணுகு முறையை மேற்கொள்வதன் தேவையை அறிவுறுத்துவதாக அமைகிறது.

**மதுரையும் நில அமைப்பும்:**

தமிழின் செவ்வியல் இலக்கியமான, சங்க இலக்கியத்துள் ஒன்றான 'பரிபாடல்' மதுரையின் பண்பாட்டு வரலாற்றை விவரிப்பதன் காரணமாக. தென் தமிழகத்தின் பண்பாட்டுப் பகுதிகளில் ஒன்றான மதுரையின், ஈராயிரம் ஆண்டு வரலாற்று தொடர்ச்சியை அறிந்து கொள்ள முடிகிறது.ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் நிலவியல் தோற்றமானது, இயற்கைத் தோற்றம், பண்பாட்டு தோற்றம் எனும் இரு பகுதிகளை உள்ளடக்கியது என்று நிலவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர், அவ்விரு பகுதிகளில் காணப்படும் கூறுகளை வரலாற்று அறிஞர்கள் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர்,

> "இயற்கைத் தோற்றத்தில் அப்பகுதியின் தட்பவெட்பநிலை, நில அமைப்பு, நில வளம் முதலியவையும், பண்பாட்டுத் தோற்றத்தில் அதன் மக்கள், அவர்கள் வாழிடம், தொழில் போன்ற பல கூறுகள் ஆகியவையும் கூறப்படும்"

(தமிழக வரலாற்று குழுவினர்-1975:பக்-34,35)

அதனடிப்படையில், பரிபாடல் காலத்து மதுரையின் நிலவியல் தோற்றமானது, மலைப் பகுதியானக் குறிஞ்சியோடு தொடர்புடைய திருப்பரங்குன்றம், காடு சார்ந்த முல்லை பகுதியானத் திருமாலிருஞ்சோலைமலை, ஆற்றுச்சமவெளிப் பகுதியான மருத நிலத்து வையை ஆறு ஆகிய மூவகை நில அமைப்பிணைக் கொண்டதாகவும் அவ்வமைப்பில் சீரான தட்பவெட்பம் நிலவியதால் அந்நிலப்பகுதிகள் பல்வேறு நீர், நில வளங்கள் நிறைந்ததாகவும் அமைந்திருந்ததைப் பரிபாடல்

*குறிப்பிடுகின்றது. அதனால் அப்பகுதியின் இயற்கைச் சூழலையும் அதன் காரணமாக தோற்றம் பெற்ற பண்பாட்டினையும் அறிந்து கொள்ள முடிகிறது.*

**திருப்பரங்குன்றம்:**

*மதுரையின் நிலப்பரப்புக்களில் திருப்பரங்குன்றம் எனும் பகுதி பல்வேறு இயற்கை வளங்கள் நிறைந்ததாக அமைந்திருந்தது. அக்குன்றில் நீர் நிறைந்த சுனைகள், கடம்ப மலர்கள், கொன்றை மலர்கள், வேங்கை மலர்கள், காந்தள் மலர்கள், கொடிகளிடத்து மலர்ந்த பல்வேறு மலர்கள் ஆகியவைக் கார்காலத்தைப் போன்று, வேனிற்காலத்தும் செழித்து வளர்ந்துள்ளதைப் பின்வரும் பரிபாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன.*

**"நீர் அயல் கலித்த நெரிமுகைக் காந்தள்**
**வார்குலை அவிழ்ந்த வள்ளிதழ் நிரைதொறும்**
**விடுகொடிப் பிறந்த மென்தகைத் தோன்றிப்**
**பவழத் தன்ன செம்பூத் தாஅய்க்**
**கார்மலிந் தன்றுநின் குன்று………"** **(பரி-14:13-17)**

*அவ்வாறு பல்வேறு இயற்கை வளங்களைக் கொண்டிருந்த திருப்பரங்குன்றத்தின் இயற்கைச் சூழல் மதுரையின் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஏற்புடையதாக இருந்துள்ளது தெளிவாகிறது.*

**திருமாலிருஞ்சோலை:**

*பரிபாடலில், இருங்குன்றம் என்று அழைக்கப்படும் திருமாலிருஞ்சோலையில், குறிஞ்சியும் முல்லையும் ஆகிய இருநிலப்பகுதிகளும், ஒன்றோடொன்று இணைந்துள்ளதாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அக்குன்றம் குறிஞ்சிக்குரிய சுனை, அருவி, கடம்பு, வேங்கை, மந்தி, மயில் போன்றவையும், முல்லைக்குரிய முல்லை மலர், காட்டாறு (சிலம்பாறு), சோலை, குழல் போன்றவையும் ஆகிய இரு நிலத்து பொருட்களும் இணைந்த நில அமைப்பாக விளங்கியுள்ளது. (பரி-15:19-23,30-32,38-41)*

**"சிலம்பாறு அணிந்த சீர்கெழு திருவின்**
**சோலையொடு தொடர்மொழி மாலிரும் குன்றம்"** **(பரி-15:22,23)**

*இவ்வரிகள் இருங்குன்றில் ஆரவாரத்துடன் வரும் சிலம்பாற்றினைக் குறிப்பிடுகின்றன. அத்தன்மையுடைய சிலம்பாறு அழகு செய்யும் இருங்குன்றம் என்பது திரு என்னும் சொல்லோடும், சோலை என்னும் சொல்லோடும், மாலிரும்குன்றம் என்னும் சொல் இணைந்து தொடர் மொழியாகிய 'திருமாலிருஞ்சோலைமலை' என்னும் பெயரினைக் கொண்டதாகும்.(சாரங்கபாணி- 2003: ப-220), அப்பெயரினைக் கொண்டே, திருமாலிருஞ்சோலைமலை என்பது குறிஞ்சியும் முல்லையும் இணைந்த வளம் மிக்க பகுதியாக இருந்துள்ளது என்பது தெளிவாகிறது.*

*அவ்வாறாக திருப்பரங்குன்றமும், திருமாலிருஞ்சோலைமலையும் இயற்கை வளங்கள் மிகுந்த சூழலமைப்பைப் பெற்றிருந்ததால்,அவை மதுரையின் பண்பாட்டு வளர்ச்சிக்கு காரணமாயிருந்தன என்பதைப் பரிபாடல் வழி அறிந்துகொள்ள முடிகிறது.*

**வையை நில அமைப்பு:**

*உலகிலுள்ள அனைத்து நாகரீகமும் ஆற்றுச் சமவெளியை அடிப்படையாகக் கொண்டது என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்தாக உள்ளது. அத்தகைய ஆற்றுச் சமவெளியின் சிறப்பினை,*

> ‘‘சமுதாய அமைப்பு முழுவதையும் மாற்றி அமைக்கக்கூடிய முக்கிய பொருளாதார வளர்ச்சியானது ஆற்றுப்படுகையின் நீர்ப்பாசனம் மிக்க சமவெளிப் பகுதியில் தான் தோன்றுவது சாத்தியம்’’ (கார்த்திகேசு சிவத்தம்பி-2010:ப-19)

எனும் இக்கூற்றின் வழி அறியலாம். அவ்வகையில் மதுரை நகரின் பண்பாட்டு வளர்ச்சிக்கு, வையையின் வளம்மிக்க ஆற்றுப்படுகைக் காரணமாவது விளங்குகிறது. அத்தகைய வையையின் தோற்றம் குறித்தும் அதன் வளங்கள் குறித்தும் பரிபாடல் எடுத்துரைக்கின்றது.

மலையில் பெய்த பெருமழைக் காரணமாக, அங்குள்ள அருவிகளில் நீர் பெருகி மலையிலுள்ள வளங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, வையை எனும் ஆற்றுடன் கலந்து, மதுரையை நோக்கி, பெருவெள்ளமாகப் பாய்ந்துவரும் வையை வளமிக்க ஆறாக விளங்கியுள்ளதைப் பரிபாடல் காட்சிப்படுத்தியுள்ளது.

**“வரை வரை தொடுத்த வயங்குவெள் ளருவி**

**..................................................**

**பெயலாற் பொலிந்து பெரும்புனல் பலநந்த**

**நலன்தந்த நாடணி நந்தப் புலன் நந்த**

**வந்தன்று வையைப் புனல்”** (பரி–7:4, 8–10)

இப்பாடல் வரிகள், அருவி நீர் பெருகிப் பல நீரோட்டத்துடன் கூடி வையையில் கலந்து வெள்ளமாகப் பாய்ந்து ஓடியதால், உயிர்களுக்கு நலமும், மென்புலமான மருதம், வன்புலமான முல்லை, குறிஞ்சி ஆகிய மூவகை நிலங்களுக்கு வளமும் பெருகும்படியாக இருந்துள்ளது. (சாரங்கபாணி-2023: ப-124) என்பதைக் குறிப்பிடுகின்றன. அதனால் வையையின் தோற்றமும் அதன் வளமும் குறித்து அறிய இயலுகிறது. மேலும், பாரத நதிகள் குறித்து ஆய்வு செய்த ராதாகிருஷ்ணன் பிள்ளை, வையை ஆற்றின் தோற்றம் குறித்து,

> ‘‘வையை ஆறு, மதுரை மாவட்டத்தின் தென்மேற்கே தொடங்கி வடகிழக்கு பகுதி வரை பரவியுள்ள வருட நாட்டு மழை தொடரின் பள்ளத்தாக்கில் உற்பத்தியாகிறது. பழனி மலையில் மேற்கில் தோன்றும் வராக நதியும், கொடைக்கானலில் உள்ள பாம்பாறும், வத்தலக்குண்டு வழியாக பாயும் மஞ்சள் ஆறும் ஆகிய இவை அனைத்தும் ஆண்டிப்பட்டி மலை, நாகமலைகளின் வடக்குச் சரிவாக பாய்ந்து வரும் வையுடன் கலக்கின்றன’’
>
> (ராதாகிருஷ்ணன் பிள்ளை- 2013: பக்-16,17)

என்பதாக விவரித்துள்ளார். அதன் வழியாக, பரிபாடல் காலத்து புலவர்கள் குறிப்பிட்ட வையையின் தோற்ற காட்சியானது, அப்புலவர்களின் ஆய்ந்தறிந்து விளக்கும் தன்மையைப் புலப்படுததுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறாக மதுரையை வந்து சேர்ந்த, வெள்ள நீரானது தான் கொணர்ந்த வளங்களையெல்லாம், மதுரையின் வையை கரையிடத்தே சேர்த்துள்ளது.அத்தகைய அப்புது வெள்ளத்தினைக் கொண்டாடுவதற்காக, மதுரை மக்கள் விரைந்து சென்று நீராடியுள்ளனர். (பரி-20:12-26), பொதுவாக வெள்ளநீரானது அதன் வேகம் காரணமாகத் தன்னெதிர் கண்டதையெல்லாம் அடித்துக்கொண்டு செல்லும் இயல்புடையது. அதற்கு மாறாக, வையை ஆறு தன்னைக் கொண்டாடி மகிழ வரும் மக்களைத் தன் போக்கில் இழுத்துச் செல்லாமல், அவர்கள் நீராடி மகிழ்வதற்கு இடம் கொடுத்துள்ளது வியப்பினை ஏற்படுத்துகிறது.

மேலும் தான் மலையிலிருந்து கொண்டு வந்த பொருட்களையெல்லாம் வையை கரையிலுள்ள திருமருதமுன்றுறை எனும் துறையிடத்தே, கொண்டுவந்து குவித்துள்ளதைப் பரிபாடல் சுட்டிக்காட்டுகின்றது. இக்காட்சியை,

**"வேய்பயில் சோலை அருவி தூர்த்தரப்**

**பாய்திரை உந்தித் தருதலான்**

**,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,**

**திருமருத நீர்ப்பூந் துறை"** **(பரி-11: 23,24,30)**

இப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

பின் வையை மதுரையை அடைந்ததும், ஆற்றில் நீர் பெருக்கம் ஏற்பட்டு, அதன் கரைகள் உடைகின்றன. அந்நிகழ்வானது பரிபாடலிலும், திருவிளையாடற்புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. அதனை

**"புரைகெழு சையம் பொழிமழை தாழ**

**நெறிதரூஉம் வையைப் புனல்"** **(பரி-11:14,15)**

**"திரைச்சிறை உடைத்தன்று கரைச்சிறை"**

**(பரி-6:23)**

**"..............................................................நீர்கரை சுமந்தொ துக்கிவரும் ஓதநீர்ப்**

**பொருங்க தத்தினை யடக்கு வீரென அமைச்சரும் தொழுது போயினார்**

**(திருவிளையாடற் புராணம்-2992)**

எனும் இப்பாடல் வரிகள் வெளிக்காட்டுகின்றன.

அவற்றிலிருந்து வையை புதுவெள்ளத்தை மக்கள் கொண்டாடுவதும், அவ்வெள்ளம் துறையிடத்தே பல்வேறு பொருட்களைச் சேர்ப்பதும், நீர் பெருக்கம் காரணமாக கரை உடைவதும் ஆகிய அந்நிகழ்வுகளினால் வையையின் நீரோட்டத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது. ஆகவே வையையின் புது வெள்ளத்தை மக்கள் கொண்டாடுவதற்கு வழிவகை செய்யும் விதமாக அதன் சூழலமைப்பு, இயற்கையாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும் .

**வையையின் சூழல் அமைப்பும் காரணமும்:**

அக்கால இலக்கியங்கள், அன்றைய நிலவியல் சூழலைக் காட்சிப்படுத்தியுள்ளது என்பதால், பரிபாடல் குறிப்பிடும் வையையின் நில அமைப்பினையும்,அது மதுரையை அடையும் பொழுது ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் இனங்காண முடிகிறது. அம்மாற்றத்திற்கு மதுரையின் நிலவியல் அமைப்பு காரணமாக உள்ளதைச் செயற்கைக்கோள் உதவியுடன் வரலாற்று அறிஞர் ஆர். பாலகிருஷ்ணன் தன் நூலில், இடவியல் ஆய்வு எனும் அறிவியல் முறைப்படி அதற்கானத் தரவுகளைத் தந்துள்ளார். அதன் வழியாக, வையை ஆற்றின் நீரோட்டமானது, மலையிலிருந்து வேகமாகக் கரை புரண்டு பாய்ந்தோடி வந்து, மதுரையை அடையும் பொழுது சமவெளியைச் சந்திக்கிறது என்றும், அச்சமவெளிக்கு மதுரையின் நிலவியல் சாய்வு குறைவாக இருப்பதே காரணம் என்றும், அவ்வறிஞர் குறிப்பிடுவதால் வையியின் நீரோட்ட வேகத்தை அறிய இயலுகிறது.

மேலும், வையை தான் தோன்றும் இடத்திலிருந்து நிலச்சாய்மானத்தின் துணைக்கொண்டு, கீழ்நோக்கி வருகிறது. மதுரையில் அச்சாய்மானம் குறைந்து, சமநிலையை அடைந்து தட்டையாகிறது.

*அதனால் வையையின் வேகம் குறைந்து கிட்டத்தட்ட ஓடாநிலையை அடைகிறது. அவ்வாறான மதுரையின் சமவெளியைக் காட்டும் வையையின் உயர வீழ்ச்சிக்கானத் தரவுகள் கீழ்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது. (ஆர். பாலகிருஷ்ணன்-2022:பக்-65, 66)*



**வையையின் தோற்றப்புள்ளி முதல் கடல்வரை**
- நீளம் (தொலைவு) – 295 கி.மீ (ஏறக்குறைய)
- உயரம் – 1210 மீட்டர் (ஏறக்குறைய)



**வையையின் தோற்றப்புள்ளி முதல் மதுரைவரை**
- நீளம் (தொலைவு)– 164 கி.மீ (ஏறக்குறைய)
- உயரம் (வீழ்ச்சி) – 1082 மீட்டர் (1210-1082= 128 மீ)



**மதுரையிலிருந்து கடல்வரை**
- நீளம் (தொலைவு) – 130 கி.மீ
- உயர வீழ்ச்சி – 128 மீட்டர்

*இத்தரவுகளிலிருந்து, வையையானது மதுரையை அடையும் பொழுது, அதன் உயர வீழ்ச்சி குறைவதையும் அதற்கு மதுரையின் நிலவியல் சாய்வு காரணமாவதையும் அறியலாம். அச்சாய்வானது மதுரையைச் சமதளப் பகுதியாக மாற்றியதனால் வையையின் உயர வீழ்ச்சி, மதுரையை அடையும் பொழுது குறைந்து, ஆற்றின் வேகம் தடைபட்டு தேக்க நிலையை அடைகிறது. அக்காரணங்களால் மதுரை மக்கள் வையையைக் கொண்டாட முடிந்துள்ளது என்பதை இடவியல் ஆய்வின் வழியாக விரிவாக அறிந்து கொள்ள முடிகிறது.*

**நிலவியல் தீர்மானிக்கும் பண்பாடு:**

*ஒவ்வொரு நிலப்பரப்பிலும், காணப்படும் இயற்கைத் தோற்றத்திற்கு ஏற்றவாறு, அங்கு வாழும் உயிரினங்கள் இயற்கையோடு தகவமைந்து தொடர்ந்து வாழ்கின்றன. அது, அவைகளின் வாழ்க்கை முறையினை மாற்றி அமைக்கின்றது. அந்நிலப்பரப்பில் வாழும் மனிதனின் வாழ்க்கையிலும் அதன் நிலஅமைப்பு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதனால் மனிதனின் வாழ்க்கை முறையானது, ஒவ்வொரு நில அமைப்பிலும் (landscape) வேறுபட்டு தோன்றுகிறது. அதற்கு அந்நிலங்களில் காணப்படும் இயற்கை சூழல் அமைப்பே காரணமாகின்றன. அதனை "இயற்கையின் சூழ்நிலை மனித வாழ்வினை மாற்றுகின்றது"(மு.வரதராசன்-2018:ப-26) எனும் கருத்தானது தெளிவுபடுத்துகின்றது. அதன் வழியாக ஒவ்வொரு நில அமைப்பிலும் பல்வேறு விதமான இயற்கைச்சூழல் இருப்பதனால் அதன் தாக்கம் மனித வாழ்விலும் வெளிப்பட்டு, நிலத்திற்கு நிலம் பண்பாடு மாறுபட்டு அமைந்துருப்பது தெளிவாகிறது. எனவே குறிப்பிட்ட நில அமைப்பு அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைக்கு காரணமாகிறது என்பதை அறிய முடிகிறது.*

*அவ்வாறு மனிதன் வாழும் நில அமைப்பே, அவனது வாழ்க்கை முறையானப் பண்பாட்டுக் கூறுகளைத் தோற்றுவிக்கும் என்னும் கோட்பாட்டிற்கு 'நிலவியல் தீர்மானவாதம்' (Geographical Determinism) அல்லது சுற்றுச்சூழல் தீர்மானவாதம் (Environmental Determinism) என்று நிலவியல் அறிஞர்கள் பெயரிட்டுள்ளனர். அத்தீர்மானவாதம் குறித்து ஹார்சோம் என்னும் அறிஞர் பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார்.*

*"சுற்றுச்சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் தீர்மானவாதம் ஆகியவை அறிவியல் காரணிகளாக*

*அளவீடு செய்வதற்கும், சமுதாயத்தில் ஏற்படும் தாக்கங்களை அறிந்து கொள்வதற்கும் உதவுகிறது'' (கட்டுரை: ஜெரால்ட். சி. ஹார்டின்-2009: ப-10)*

*இக்கூற்றின் வழியாக, ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் பெரும்பான்மையானப் பண்பாட்டைத் தீர்மானிப்பதில் நில அமைப்பு முதன்மைக் காரணியாக உள்ளது என்பதனைத் தெள்ளதின் அறிய இயலுகிறது. அத்தீர்மானவாதக் கோட்பாடே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நிலத்தில், தொல்காப்பியரால் திணைக் கோட்பாடாகக் கருத்துருவாக்கம் பெற்றிருந்தது என்பதைத், தமிழின் முதல் இலக்கண நூலானத் தொல்காப்பியத்தின் வழியாக அறிந்து கொள்ளலாம். அக்கோட்பாட்டில் மனிதனின் வாழ்க்கைமுறையைத் தீர்மானிக்கும் நிலமும், காலமும் முதற்பொருளாகவும், அந்நிலத்திலுள்ள உயிருள்ள பொருளும் உயிரற்ற பொருளும் கருப்பொருளாகவும், மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் உரிப்பொருளாகவும் வகுக்கப்பட்டுள்ளன. அதனை,*

**"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்"**

**(தொல்.பொருள்: நூற்-4)**

**"தெய்வ முணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவுங் கருவென மொழிப"**

**(தொல். பொருள்:நூற்-20)**

**"புணர்தல் பிரித லிருத்த லிரங்கல்**
**ஊட லவற்றி னிமித்த மென்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"**

**(தொல். பொருள்:நூற்-16)**

*இந்நூற்பாக்களின் வழியாக அறிய முடிவதால், அத்திணைக் கோட்பாட்டை விளங்கிக் கொள்ள முடிகிறது. அக்கோட்பாடு குறித்து,''தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு, மக்களின் வாழ்க்கை முறையும், பண்பாடும் அமையும்'' என்று வரலாற்று அறிஞரான கே.கே. பிள்ளை விளக்குவது குறிப்பிடத்தக்கது. மேலும், அவர் 'திணை' என்னும் சொல், நிலத்தோடு தொடர்புடைய பலபொருள் கொண்டதைக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார். (கே.கே.பிள்ளை-2023: பக்- 125,126)*



மேற்கூறியவாறு, தமிழ் அறிஞர்களின் அக்கருத்துக்களால், தீர்மானவாதமும் திணைக்கோட்பாடும் ஒன்றோடொன்று ஒப்புமைக் கொண்டுள்ளதை அறிய இயலுகிறது. அதனடிப்படையில், பரிபாடல் குறிப்பிடும் மதுரையின் மூவகை நில அமைப்புகளுள் வையையின் சூழலமைப்பானது அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கையில், தனித்த பண்பாடு உருவாக முதன்மைக் காரணியாக இருந்துள்ளதைப் பின்வரும் பகுதி விளக்குகின்றது.

**வையையும் தமிழர் பண்பாடும்:**

மதுரையின் நிலவியல் தோற்றம், வையையின் வேகத்தை குறித்து, மக்கள் கொண்டாடுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துகின்றது. அதனால் வையையின் வரவை மக்கள் திருவிழாவாகக் கருதி, அவ்விழாவிற்குரிய ஆடை, அணிகலன்களை அணிந்து கொண்டும், புகை, பூ ஆகிய வழிபாட்டுப் பொருட்களுடனும், அவ்விழாவினைக் கொண்டாடி மகிழ, வையை நோக்கிச் சென்றுள்ளனர். அக்காட்சியானது, மதுரையின் மருத நிலத்து வையை ஆற்றின் சூழலமைப்பு, பரிபாடல் காலத்து மதுரையில்,'புனல் விழா' எனும் பண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது என்பதைப் படம்பிடித்து காட்டுவதாக அமைந்துள்ளது.

**"புகை பூ அவி ஆராதனை அழல்பல ஏந்தி**
**நகை அமர் காதலரை நாளணிக் கூட்டும்**
**வகைசாலும் வையை வரவு"** **(பரி-6:11-13)**

எனும் இப்பாடல் வரியிலுள்ள 'நாளணி' என்பது திருவிழாக் காலங்களில் சிறப்பாக அணிந்து கொள்ளும் ஆடை, அணிகலன்களைக் குறிக்கிறது (பொ.வே சோமசுந்தரனார் – 1964: ப- 82) என்பதால், மதுரை மக்கள் வையை வரவை 'புனல் விழா'வாக கொண்டாடியுள்ளது தெளிவாகின்றது. அத்தகைய புனல்விழா என்பது பண்டைக்காலந்தொட்டு நிகழ்ந்து வரும் தமிழரின் தனித்தப் பண்பாடாகும். ஏனெனில் நிலத்தை வளமாக்கும் ஆறுகள், மக்களின் மகிழ்ச்சிக்குரிய புனலாட்டிற்கும் பயன்படுவதால், அதை தெய்வமாக எண்ணி மக்கள் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர், அத்தகைய அப்புனலாட்டினைத் தொல்காப்பியரும்,

**"யாருங் குளனும் காவும் ஆடி"** **(தொல். பொருள்:நூற்:189)**

எனும் நூற்பா வழி, இன்ப விழாவிற்கு ஆறு பயன்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார். அதனால், மதுரை மக்களும் வையை ஆற்றினைத் தெய்வமாகக் கருதி கொண்டாடி மகிழ்ந்துள்ளனர் என்பதை அறிய இயலுகிறது.



**நீராடைகளும் அணிகலன்களும்:**

*வையை வரவை அறிந்ததும், மதுரை மக்கள் மிகுவிருப்பத்துடன் புனலாடுவதற்காகக் கூட்டம் கூட்டமாக விரைந்து சென்றுள்ளனர். அவ்வாறு செல்லும்போது, கைவளை, மோதிரம் தலையணி, மேகலை, காஞ்சி, வாகுவலையம் (தோள்வளை) போன்ற அணிகலன்களை அணிந்து சென்றுள்ளனர். (பரி-6:45-47) மேலும் பூக்களைச் சூடியும் அகில் சாந்து, வாசனைத் தைலம் பூசியும் (பரி-12:14-19), புட்டகம், ஈரணி ஆகிய நீராடைகள் அணிந்தும் (பரி-12:17,6:28) மெல்லிய நூலால் செய்த தாளித்ததை எனும் மிதியடியை அணிந்தும் (சாரங்கபாணி-2023:ப-162) விரைந்து சென்று மகிழ்வுடன் நீராடியுள்ளனர் என்பதால், அக்கால நீராடும் ஆடை, அணிகலன்கள் குறித்து அறிந்து கொள்ள முடிகிறது.*

**"புட்டகம் பொருந்துவ புனைகு வோரும்**
**கட்டிய கயில்அணி காழ்கொள் வோரும்**
**வாச நறுநெய் ஆடி"** **(பரி-12:17-19)**

*எனும் இவ்வையை பாடல் அடிகள் நீராடும் ஆடை அணிகலன்கள் குறித்து எடுத்துரைக்கின்றன.*

**ஊர்திகளும் மக்களும்:**

*புது வெள்ளத்தில் நீராடுவதற்கு விரைவாகச் செல்ல வேண்டுமென்று விருப்பம் கொண்ட மக்கள், பல்வேறு வண்டிகளில் ஏறி விரைந்து சென்றுள்ளனர். அம்மக்கள் குதிரையும் தேரும் யானையும் தேரும், கோவேறு கழுதையும் ஆகிய வண்டிகளிலும் (பரி-22:24) மரப்பல்லக்கிலும் (பரி-10:15-17) எருது பூட்டிய வங்கம் (பரி-20:17) மணிக்கட்டிய நெடுந்தேர் முதலிய வண்டிகளிலும் ஏறி நீராடுவதற்காக விரைந்து சென்றுள்ளனர். அதனை,*

**"பிடிமேல் அன்னப் பெரும்படை அனையோர்**
**கடுமா கடவுவோரும் களிறுமேல் கொள்வோரும்**
**வடிமணி நெடுந்தேர் மாமுள் பாய்க்குநரும்**
**விரைவு விரைவு மிகைமிகை ஈண்டி"** **(பரி-12:27-30)**

*இப்பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. அதனால் வையைக்கு செல்ல மக்கள் பயன்படுத்திய ஊர்திகள் குறித்து அறிந்துகொள்ள முடிகிறது*

**நீர் விளையாட்டு கருவிகள்:**

*மதுரை மக்கள் புனல் விழாவில் நீராடுதலோடு, நீர் சார்ந்த விளையாட்டுக்களையும் விளையாடியுள்ளனர். அவ்வாறு விளையாடும் பொழுது பீச்சாங்குழல், கொம்பு, வட்டு, துருத்தி, சந்தனக் கலவைப்பெட்டி போன்ற கருவிகளையும் பயன்படுத்தியுள்ளனர். மேலும் வாழைத்தண்டின் துணையுடன் நீரில் நீந்தும் பயிற்சியையும் மேற்கொண்டுள்ளனர். (பரி-11:106) மிதவையில் சென்றும் புனல்விழாவைக் கொண்டாடியுள்ளனர். அவ்வாறாக மக்கள் வையையில் விளையாடுவதால் அம்மக்களின் வாழ்க்கைமுறை மேம்பட்டுள்ளது தெளிவாகிறது.*

**கொம்பு - பனி நீர் நிறைந்தது - "நீர்மணக் கோட்டினர்"**
**துருத்தி - புழுகு நீர் நிரப்பியது – "நெய்ம்மாண் சிவிறியர்"**
**மிதவை - வெள்ளிய நெட்டியால் செய்யப்பட்ட தெப்பம் – "வெண்கிடை மிதவையர்"**

**(பரி - 6:34,35)**

பீச்சாங்குழல் - இரத்தம் போன்ற தூயநீரை எக்கும் கருவி - ''நெய்த்தோர் நிற அரக்கின் நீர் எக்கி''

சந்தனக்கலவைப் பெட்டி - முத்து போன்ற பணிநீரோடு கலந்த சந்தனம் நிறைந்தது – ''முத்து நீர்ச் சாந்தடைத்த மூஉய்'' (பரி-10:12,13)

வட்டு - அரக்கு நீர் அடக்கியது – ''வண்ண நீர் கரந்த வட்டு''

வாள்,வேல் - நெட்டியாலான வாள்,வேல் –''வெள்வாள் விதிர்போர் மிளிர் குந்தம் ஏந்துவோர்'' (பரி-11: 55, 50)

என்பதான அக்கருவிகள் நீர் விளையாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன (சோமசுந்தரனார் – 1964:ப-84),(சாரங்கபாணி-2023:162,180) மேலும் பல்வேறு வகையான விளையாட்டுக்கள் வையையில் விளையாடப்பட்டுள்ளதைப் பின்வரும் நிகழ்வுகளால் அறிய இயலுகிறது.

- துருத்தியால் நீரை தூவும்பொழுது, கண்களை மூடிக்கொண்டு மகளிர் விளையாடுதல்
- வாழைத்தண்டின் துணைகொண்டு நீந்தி விளையாடுதல்
- தாழைமலரின் பொடியை வையையில் தூவுதல்
- தோனியில் ஏறி அதை நீரில் செலுத்துதல்
- நீரோடும் திசைக்கு எதிர் திசையில் நீந்துதல்
- பெண்கள் சிறு வீடு கட்டி சிறுசோறு சமைத்தல்
- மைந்தர் சிலர் சிறு சோறு கேட்க மகளிர் சோறு போட மறுத்தல்
- அதனால் ஏமாற்றமடைந்த மைந்தர் அம்மகளிரின் பந்து கிழங்கு போன்றவற்றை எடுத்துக் கொண்டு வையையில் பாய்ந்து விளையாடுதல்

என்பனவாக மகளிரும் ஆடவரும் பல்வேறு வகையான நீர் விளையாட்டுகளை விளையாடினர்(பரி-10:100-108) என்று கரும்பிள்ளை பூதனார் பட்டியலிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறாக சங்க மக்களின் நீர் விளையாட்டினையும், அதற்கானக் கருவிகளையும் பரிபாடல் விரிவாக விவரிப்பதால், அக்கால மக்கள் நீர் விளையாட்டிற்கென்றே தனித்தக் கருவிகளை உருவாக்கியுள்ளதையும், அவற்றைக் கொண்டு விளையாடி பொழுதுபோக்கியுள்ளதும் ஆகிய நிகழ்வுகளை அறிந்து கொள்ள முடிகிறது.

**வாழ்த்தும் வழிபாடும்:**

தெய்வத்தை வாழ்த்துவதும் வழிபடுவதும் தமிழ் மக்களின் இயல்பாகும். அதனை, ''நாட்டின் அனைத்து வளங்களும் செழித்து வளர மழையும், ஆறும் அடிப்படை காரணமாக இருப்பதால், அவை பண்டைய மக்களால் தெய்வமாக போற்றப்பட்டு கொண்டாடப்பட்டுள்ளது'' (சாரங்கபாணி-1977: ப-197) எனும் கருத்தின்வழி அறியலாம். அக்கருத்தாக்கம் வையை ஆற்றுக்கும் பொருந்துவதாக அமைகிறது. அதனால்தான் மதுரை மக்களும், வையையை தெய்வமாகக் கருதி வழிபட்டுள்ளனர். அத்தகைய வையையானது உயிர்களைப் பசியின்றி வாழ வைக்கும் தன்மைக் கொண்டது என்பதால், அதற்கு சுற்றத்தாரோடு கூடி விருந்து செய்து, அதன் வளம் குன்றாமல் என்றும் நிலைத்திருக்க

*வேண்டுமென்று வாழ்த்தியுள்ளனர். மேலும், நீர்வாழ் உயிரினங்களான நண்டு, இறால் மீன், வாளை மீன், சங்கு ஆகியவற்றைப் பொன்னால் உருவம் செய்து, வையையில் இட்டு,அதனை விளைக! பொலிக! என்று வாழ்த்தியும் (பரி-10: 85, 86), மாலை, சாந்து, கத்தூரி, அணிகலன்கள் ஆகியவற்றை வையைக்கு அணி செய்தும் (பரி-10: 92, 93) அவி மற்றும் நெருப்பு ஆகியவற்றைக் கொண்டு ஆராதனை செய்தும் (பரி-6:11), தொழுதும் (பரி. திர-2: 79) வழிபட்டு மகிழ்ந்துள்ளனர் என்பது அவர்களின் வழிபாட்டு முறைகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன .*

**"வருந்தாது வரும்புனல் விருந்துஅயர் கூடல்**
**அரும்கறை அறைஇசை வயிரியர் உரிமை**
**ஒருங்குஅமர் ஆயமொடு ஏத்தினர் தொழவே"** **(பரி-10:129-131)**

*எனும் இவ்வரிகள் மக்கள் வையையை வழிபட்ட முறையைக் காட்டுகின்றன. அவ்வாறான வழிபாட்டு முறைகள், அக்கால மக்களின் இயற்கையை வழிபடும் சமய நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதமாக அமைகின்றன.*

**ஆடலும் பாடலும்:**

*வையையில் நீராடிய மக்களுள் சிலர், கரையிலிருந்து ஆடல் பாடலுடன் கூடிய இசை நிகழ்ச்சியை நடத்தியிருக்கின்றனர். அந்நிகழ்ச்சியில் பாணர்கள் மருதப் பண் இசைக்க, மக்கள் அப்பாணர்களைத் தொடர்ந்துப் பாடிப் பின் புனலாடச் சென்று மகிழ்ந்துள்ளனர். அந்நிகழ்வினை*

**"திருமருத முன்துறை முற்றம் குறுகித்**
**தெரிமருதம் பாடுப பிணிகொள்யாழ்ப் பாணர்**
**பாடிப் பாடிப் பாய்புனல்"** **(பரி. திர-2: 72-74)**

*எனும் இவ்வரிகள் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. மேலும் புல்லாங்குழல், முழவு, மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி (பரி-12:40,41) துடி (பரி-22:42) போன்ற இசைக்கருவிகளைக் கொண்டு இசைத்தும், அதற்கேற்றாற்போல் ஆடியும் மக்கள் வையையைக் கொண்டாடியிருப்பது அக்கால இசை நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் விதமாக விளங்குகின்றன.*

**நீரங்காடியும் வையையும்**

*புனல்விழாவிற்கு செல்லும் மக்கள், அவ்விழாவிற்குரிய பொருட்களை, அங்கிருந்த நீர் விழாவிற்கானப் பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் அங்காடியிலிருந்து வாங்கிச் சென்றுள்ளதைப் பின்வரும் பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன.*

**"நீரணி கொண்டன்று வைகை யெனவிரும்பித்**
**தாரணி கொண்ட உவகை தலைக்கூடி**
**ஊரணி கோலம் ஒருவர் ஒருவரின்**
**சேரணி கொண்டு நிறமொன்று வெவ்வேறு**
**நீரணி கொண்ட நிறையணி அங்காடி**
**ஏரணி கொண்டார் இயல்"** **(பரி,திர-2: 5-10)**

*இப்பாடல் வரியிலுள்ள அங்காடி என்பது நீராடுதற்குரிய பொருட்களை விற்கும் கடைத்தெருவாகும். அங்கு நெட்டியாலியற்றிய வேல், வாள், தேர் போன்ற படைக் கருவிகளும், பொன்மீன், பொன்னண்டு, மாலை, மணப்பொருள் முதலியனவும் விற்கப்பட்டுள்ளது. (பொ.வே. சோமசுந்தரனார்-1964:ப-391) அதனால் சங்க காலத்தில் நீரங்காடி எனும் கடை இருந்துள்ளது தெளிவாகிறது.*

அவ்வாறாக, மதுரை தமிழ் மக்கள் அனைவரும் வையையை வாழ்த்தியும் வழிபட்டும், அதில் நீராடியும், தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி புனல்விழாவினைக் கொண்டாடியுள்ளனர். அக்கொண்டாட்டம் உருவாக முதன்மைக் காரணமாக மதுரையின் நிலவியல் சாய்வும், வையையின் நிலஅமைப்பும் விளங்கியுள்ளதைப் பரிபாடல் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

**தொகுப்புரை:**

சங்க இலக்கியமானப் பரிபாடலில் மதுரையில் பாயும் வையையின் புதுவெள்ளத்தின் இயல்புகளையும், அவ்வெள்ளத்தை மக்கள் போற்றி புதுப்புனல் திருவிழாவாக கொண்டாடியதையும், சங்கப் புலவர்கள் கவிதையாகப் படைத்துள்ளதன் வழி அக்கால பண்பாட்டு வளர்ச்சியை அறிந்து கொள்ள முடிகிறது.

வையையின் புதுப்புனலை மக்கள் விருப்பத்துடன் எதிர்கொண்டதன் விளைவாக,அதனை புனல்விழா எனும் திருவிழாவாக கொண்டாடியுள்ளனர். அவ்விழாவிற்குரிய கொண்டாட்டங்களின் வெளிப்பாடாக அம்மக்களின் நீர் விளையாட்டு மற்றும் அதற்கான கருவிகள், ஆடல் பாடல் இசை நிகழ்ச்சிகள் மற்றும் அதற்கான கருவிகள் அவர்கள் வையை வழிபட்ட வழிபாட்டு முறைகள், நீராடுவதற்கே உரிய தனித்த ஆடையணிகலன்கள் மற்றும் அவற்றை விற்பனை செய்த நீரங்காடிகள் அவர்கள் வையைக்கு செல்ல பயன்படுத்திய போக்குவரத்து ஊர்திகள் முதலானவை அமைந்திருந்தன. அதனடிப்படையில், மதுரை மக்களின் தனித்த பண்பாடாக 'வையை வெளிப்பண்பாடு' இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது

அப்பண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு வையையின் இயற்கைச்சூழலே காரணமாகும். மதுரையின் நிலவியல் சாய்வு வையையின் நீரோட்டச் சரிவிலிருந்து அதன் வேகத்தை குறைத்து சமதளத்தில் ஓட வைக்கின்றது. அதனால் மற்ற ஆறுகளில் இருந்து வையை வேறுபட்டு, புது வெள்ளத்தின் வேகம் குறைந்து, புதிய சூழல் உருவாகின்றது. அச்சூழல் அப்பகுதி மக்களின் வாழ்வில் புதுப்புனல் விழாவாக உருக்கொண்டு அவர்களின் தனித்த பண்பாடாக தோற்றம் பெற்று கொண்டாட்டத்தையும் மகிழ்ச்சியையும் விளைவித்துள்ளது என்பதை இக்கட்டுரை வழி அறிந்து கொள்ள முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. *Yumabpuranar (U. B)- Tolkappiyam Mahatikaram- Tamil Nadu Textbook and Educational Services Corporation, Chennai – 600006 - Mup. – 2022 (December)*

2. *Sarangapani Ira - The Paribadal Paki - Manivaskar Publishing House, Lingich Chetti Street, Chennai-1 - Second Edition – 1977*

3. *Sarangapani. Ira – Paribadal – Kovilur Monastery, Kovilur -630307 - M.P. April – 2023*

4. *Sivathambi Karthikesu – Ancient Tamil Society – New Century Book House, Chennai – First Edition – June 2010.*

5. *Somasundharanar Bove (U. B) – Paribadal – Saiva Siddhanta Literary Society, Tirunelveli – 6, Chennai – 1 – Reprint – 1964*

6. *Tamil Nadu History Group – Tamil Nadu History and Archeology – Tamil Nadu Government Publication, Chennai – First Edition – 1975.*

7. *Thananjeyan.A – Sangha Literature and Cultural Ecology – New Century Book House, Chennai – First Edition – July 2010*

8. *Bhaktavatsala Bharati – Principles of Anthropology – Sign Publishing House, Karuppur Road, Putthanattam- 621310 - Reprint – 2017*

9. *Pillai. K. K - Tamil Nadu History People and Culture - World Tamil Research Institute, Taramani, Chennai-13th - 19th Edition – June 2023*

10. *Balakrishnan. R - Or Air Uzhavan - Bharathi Buddhakalayam, Thenampet, Chennai-18 - M. P - September 2022*

11. *Radhakrishnan Pillai - Rivers of Bharat - Sumathi Buddhakalayam, Chennai - Fourth Edition - 2013*

12. *Varadarasan. Mu - Nature in Palanthamil Literature - Pari Station, Broadway, Chennai-108 - Reprint – 2018*

13. *Venkatasamy Nattar. Na. Mu - Thiruvilayadapuranam (Tru Alavaik Kantam) - Baba Publications, West Mambalam, Chennai-33 - Mu. p-2024*

14. *Carl O saucer - Leighly, John (Editor) - Land and Life - A selection from the writings of carl O saucer - University of California press, Los angeles,USA - Published year- 1963*

15. *Hardin C.Gerald – Environmental Determinism: Broken paradiagm or viable perspective – Published by – East Tennessee state University, Year: 8-2009*

**Cite this Article in English**

**Vasanthi. V "Cultural Geography in Paripaadal : River Vaigai in Perspective"** *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, Vol.1 Issue 1, July 2024, pp. 30-44*